28



# "சித்தன்"

## ஓர் மாதாந்தப் பத்திரிகை.


| மாலை 1. | நவம்பர் 35. | மணி 11. |
|---|---|---|
| Vol. 1 | November 35. | No. 11. |


1698

உள்ளுரை. பக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | நாசிக் தீர்மானம் ... ... | 385 |
| 2. | செய்யுள் பகுதி ... ... | 389 |
| 3. | நவீன அகராதி ... ... | 391 |
| 4. | காதலின் வேகம் ... ... | 393 |
| 5. | தீண்டாதார் முறையீடு ... | 403 |
| 6. | அந்தகாரம்-யாருமேயில்லை ... | 410 |
| 7. | மணப்பெண் யோக்கியதை ... | 413 |
| 8. | சொத்துரிமை ... ... | 415 |
| 9. | ...ாகடம் ... ... | 418 |
| | ...ய்ப்பகுதி ... ... | 422 |
| | ...தி ... ... | 424 |
| | ... ... | 425 |


JL
௱211, N35CN
N35 1.11.
189924

ஆசிரியர் C.P. சாமி

# "சித்தன்"

## ஓர் மாதாந்தப் பத்திரிகை.

கல்வி, கைத்தொழில், வியாபாரம், விவசாயம், வைத்தியம், சுகாதாரம் முதலிய அரிய கட்டுரைகளுடனும், தமிழ் வைத்தியர்கட்கு பெரிதும் பயன்படும் விஷயங்களுடனும் ஆங்கிலத் திங்கள் தோறும் பழனியினின்றும் வெளி வருகிறது.

---

### சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருடம் 1-க்கு | உள் நாடு | .... | ரூ. 0—8—0. |
| ,, | வெளி நாடு | ... | ரூ. 1—0—0. |
| | தனிப்பிரதி | .... | ரூ 0—1—0. |

சந்தாத்தொகையை முன்னாடியே செலுத்திவிடவேண்டும். வி. பி. யில் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. எப்போது சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அவ்வருட ஜனவரி மீ-முதல் கணக்கு வைக்கப்பட்டு, ஜனவரி-மீ சஞ்சிகை முதல் பத்திரிகை அனுப்பப்படும். பதில் விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவேண்டும்.

---

### விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| ஒரு தடவைக்கு | முழுப்பக்கம் | ரூ. 5—0—0, |
| ,, | அரைப்பக்கம் | ரூ. 3—0—0. |
| ,, | கால்பக்கம் | ரூ. 1—8—0. |

N. B:— நீடித்து விளம்பரஞ்செய்வோர் எமக்கெழுதித் தெரிந்துகொள்ளவும்.

விலாசம்:— மானேஜர்,

சித்தன்,

பழனி. S. I.

# "சித்தன்"

## பழனி.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

**மாதாந்தப் பத்திரிகை.**

ஆசிரியர்— C. P. சாமி.

| மாலை 1. | நவம்பர். 1935 | மணி 11. |
| --- | --- | --- |


## நாசிக் தீர்மானம்.

தாழ்த்தப்பட்ட மக்களது முன்னேற்றமே தமது லக்ஷியமெனக்கொண்டு அரும்பெரும் தொண்டாற்றிவரும், மாபெருந்தலைவர் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் தலைமையில் சமீபத்தில் நடைபெற்ற, நாசிக் மகாநாட்டில் ஜாதி இந்துக்கள் ஆதி இந்துக்களுக்கு சமயத்தின் பெயரால் இழைத்து வரும் கொடுமைகளை வெகு தெளிவாய் எடுத்துரைத்து, தாங்கள் சமத்துவத்தையும், சுதந்தரத்தையும் அடைய வேண்டின் இந்து மதத்திலிருந்து உடனே பிரிந்து சம அந்தஸ்தும், சம உரிமையும் அளிக்கக்கூடிய வேறு எந்த மதத்திலாவது புகவேண்டுமென்று வெட்டொன்று துண்டிரண்டு ...ய்க் கூறியதை, ஆதி இந்துக்கள் முழுமனதுடன் அங்கீக... த தீர்மானம் நிறைவேற்றி இருப்பது நேயர்கள் அறிந்த... மேயாகும். அதன் பயனாக இது சமயம் எங்கு...

894924

மிருந்த பரபரப் பேற்பட்டிருப்பதும் உண்மையேயாயினும் அறிவாளிகளும் சமூக சீர்திருத்த வாதிகளும் அத்தீர்மானத்தைப்பெரிதும் ஆதரிப்பார்களென்பதே நமது துணிபு.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் லண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மகாநாட்டிற்கு நம்தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதியாகச்சென்று, அவர்களுக்குத் தனித்தொகுதியே வேண்டுமென்று கர்ஜனை செய்த வீரராவர். மேலும் கல்வி கேள்வி, ஆராய்ச்சி, பெருந்தன்மை, உயரிய நோக்கம் முதலியன வாய்ந்தவருமாவர். நியாயத்தின்பால் நிற்கும் நேர்மையாளர். இத்தகைய ஒரு பெரியாரின் ஆதரவுபெற்று நிறைவேற்றப்பட்ட மேற்கூறிய தீர்மானமானது, ஆழ்ந்த யோசனையோடும் காலதேசவர்த்தமானங்களை அனுசரித்தும் முற்போக்கான முறையில்தான் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்பதில் என்ன சந்தேகம்? இதற்காக "தும்பியைவிட்டு வாலைப்பிடிப்பது" போன்று டாக்டர் அம்பேத்கார் மீது பாணம் தொடுப்பது எவ்விதத்தில் பொருந்தும்? அநேக நூற்றாண்டுகளாக மாக்களாய்த் தவிக்கும் ஆதி இந்துக்கள் அனுபவித்துவரும் கொடுமைகளையும், தரித்திரநாராயண வாழ்க்கையையும்பற்றிப் பேசப்புகின் இச்சஞ்சிகைதான் போதுமோ? ஆ என்னே அநீதி! என்னே கொடுமை! பரிதாபம்! பரிதாபம்!! "இந்து மதத்தைப்போல் உயர்ந்த மதம் உலகத்தில் எதுவுமில்லை. அந்தோ! இந்து மதத்தைப்போல் ஒரு சமூகத்தைத் தன் காலடியில் வைத்து நசுக்கும் மதமும் ஒன்றில்லை" என்று மகான் விவேகானந்தர் கூறிய பொன்மொழிகளை ஈண்டு குறிப்பிட விரும்புகின்றோம்.

மதமாற்றங்காரணமாக 8–கோடி தாழ்த்தப் பட்டமக்கள் திடீரென்றுநம்மைவிட்டகன்றுவிடின், உலகத்திலே
அதிகப்படியான ஜனத்தொகையைத்தன்னுள் அடக்
கொண்டிருக்தும் இந்துசமயம் சீர்குலைந்து விடுமே
கவலை எள்ளளவேனும் எவருக்காவது இருந்திருப்பி

விதத்தீர்மானத்திற்கு அவசியமேற்படுமா வென்பதை யோசிக்கவேண்டும்? மதம்மாறுதலென்பது இன்று நேற்று ஏற்பட்ட பிரச்னையல்ல; பலநூற்றாண்டுகளாகவே சிற்சிலர் தத்தம் மனோரதத்திற்கிணங்க மதமாற்றம்செய்து வந்திருக்கின்றனர், செய்தும்வருகின்றனர். இதுவரை இதைப்பற்றி எவரும் பொருட்படுத்தவேயில்லை. இப்போதும் ஒரு சிலர் மட்டும் மதமாற்றம் செய்வார்களானால் இவ்வித பரபரப்பு ஏற்பட்டிராது. உண்மையில் தாழ்த்தப் பட்டவர்களிடையே நெடுநாட்களாக நிலவிவந்த ஓர்வித உணர்ச்சிதான் இதுகாலை வெளிக் கிளம்பியிருக்கிறதேயன்றி யாதொரு நூதனமன மாற்றமும் ஏற்படவில்லை. நிற்க,

ஜாதி இந்துக்களின் அட்டூழியங்களையும் அநியாயங்களையும்தாங்கொணாது திருவாங்கூரிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களில் பலர் நாளடைவில் மதம்மாறி வருவதும், கொச்சி, மலையாளம் முதலிய இடங்களிலுள்ள ஈழுவர், தீயர் முதலியோர்களும் பிறமதத்தைத்தழுவிவருவதும் கண்கூடு. இதை இதுகாறும் மதத்தலைவர்கள் தேசத்தலைவர்கள் என்போர் கவனியாது வாளாவிருந்தனரே காரணம்யாது? முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைபோடும் எதையும் உதைத்துத் தள் என ஒரு அறிஞர் கூறியதற்கிணங்க டாக்டர் அம்பேத்காரும் அவரது சமூகத்தினரும் காரியத்தில் காட்டிவிட்டனர் போலும்.

ஆனால் டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு ஒருவார்த்தை. இந்து சமூகத்திலிருந்து பிரிந்து ஏனையமதங்களில் கலந்து கொள்ளும்போது 'விலங்குவேண்டாம்குட்டையைப் போடு' என்றமாதிரி இதேபோன்ற சமூகமதக் கொடுமைகளும் அநீதிகளும் பற்றிக்கொள்ளாதிருக்க வேண்டும். மேலும், இந்துமதத்தை தூஷிப்பதற்காகவாவது அல்லது ஏதாவதொரு மதமாற்றம் செய்யவேண்டு மென்ற அர்த்த

புஷ்டியற்ற காரணத்தாலாவது இவ்விதமுடிவுக்கு வந்திருப்பாரானுல் அதுநியாயவிரோதமேயாகும். ஆதலால் சாதி மத நிறநில பேதமற்ற ஓர்மதம் கிடைக்குமாயின் அதையாவது இன்றேல் சமரச சன்மார்க்கம் நிறைந்த ஓர் தனிமதத்தையாவது பின்பற்றுவதே நலம்.

ஆசிரியன்.

---

## கட்டுரையாளர்களே!

சித்தனுக்கு கட்டுரைகள் வந்து குவிந்து கிடக்கின்றன. அதற்காக நாங்கள் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். ஆயினும் நமது சித்தன் மாதப்பத்திரிகையாதலால் பிரதிமாதமும் வரக்கூடியகட்டுரைகள் அத்தனையும் பிரசுரம் செய்யமுடியாமைக்கு விசனிக்கிறோம். எனினும் ஆசிரியரால் ஏற்றுக்கொள்ளப்படும் கட்டுரைகள் காலக்கிரமத்தில் வெளிவருமென்பதைநேயர்கள் அறிவார்களாக.

மானேஜர்.

# செய்யுள் பகுதி.

(சாந்தன், மதுரை.)

காமலர்நறவுக்கேமலர்மூவிருகாலேநீ
தேமலர்தணிகைத்தேவர்மருங்கிற்சேர்வாயே
லாமலருடையாட்கென்பெயர்பலவாமவையுள்ளே
யோமலரடிகேளொன்றினையொன்றென்றுரையாயே.

(திருவருட்பா)

(இ-ள்) கா மலர் நறவுக்கு ஏ மலர் மூவிருகாலே—சோலை யிலுள்ள புஷ்பங்களின் தேனுக்கே எதிர்ந்து செல்லும் அறு பதம் என்னும் வண்டே! நீ—நீ; தேம் அலர் தணிகைத் தேவர் மருங்கு இல் சேர்வாய் ஏல்—வாசனை வீசுகின்ற திருத் தணிகை என்னும் க்ஷேத்திரத்திலுள்ள முருகக் கடவுளின் சமீபத்தில் போவாயானால்; ஆம் அலர் உடையாட்கு—பழிச் சொல்லை ஏற்ற தலைவிக்கு; ஓ மலர் அடி கேள்—ஓ! தாமரை மலர்போன்ற பாதங்களையுடைய அடிகளே!; என் பெயர் பல வாம் அவை உள்ளே—என்னுடைய (வண்டினுடைய) பெயர் கள் பலவற்றில் அவைகளில்;ஒன்றினை ஒன்று என்று உரை யாயே—ஒன்றாகிய அளி என்னும் அன்பைப் பொருந்துவாய் என்று சொல்லக் கடவாயோ.

(கருத்துரை) ஏ வண்டே! திருத்தணிகையில் எழுந் தருளியிருக்கின்ற முருகக் கடவுளிடத்தில் போவாயானால் ஓ அடிகளே! பழியை ஏற்றுக்கொண்டுள்ள தலைவிக்கு அன்பு பொருந்துவாய் என்று சொல்லுவாயோ என்றபடி.

தேடுங்கிளிநீநின்னைவிளம்பித்திருவன்னு
ராடுந்தணிகையிலென்னுயிரன்னாரருகேபோய்க்
கூடுந்தனமிசையென்பெயர்வைத்தக்கோதைக்கே
யீடுங்கெடவின்றென்னையுமீந்தருளென்பாயே.

(திருவருட்பா)

(இ-ள்) தேடும் கிளி நீ—நான் விரும்பும் கிளி நீ; திரு அன்னார் ஆடும் தணிகை இல் என் உயிர் அன்னார் அருகே போய்—லக்ஷ்மியை ஒத்தவர்கள் வசிக்கின்ற திருத்தணிகை

யில் எழுந்தருளி இருக்கின்ற என் (தலைவி) உயிருக்குச்சமானமான முருகக்கடவுளினிடத்தில் நெருங்கி; நின்னை விளம்பி -(தலைவியின்) தத்தை சொல்லி; அ கோதைக்கு கூடும் தனமிசை என் பெயர் வைத்து ஈடுங்கெட இன்று என்னையும் ஈந்தருள் என்பாயே—அந்த மலர்மாலை அணிந்த தலைவிக்கு நெருங்கி இருக்கின்ற ஸ்தனங்களின் மேல் (கிளியின் பெயராகிய) கிள்ளை (நகக்குறியை) வைத்து (இதற்கு) சமானமில்லை என்று சொல்லும்படி இப்போதே (என்னையும் கிளியின் பெயராகிய) சுகத்தையும் கொடுத்தருளுவாய் என்று சொல்லுவாய்.

(கருத்துரை) ஏ கிளியே! முருகனிடத்தில் தலைவியின் தத்தை சொல்லி ஸ்தனங்களிடத்தில் கிள்ளைவைத்து சுகத்தையும் கொடுத்தருளும்படி சொல்வாய் என்றபடி.

இதில் தத்தை, கிள்ளை, சுகம் என்ற பதங்கள் கிளியின் பெயர்கள்.

பொன்னையிருத்தும்பொன்மலரெகினப்புள்ளேநீ
யன்னையிகழ்ந்தேயங்கலர்செய்வானனுராகந்
தன்னையளிக்குந்தண்டணிகேசர்தம்பாற்போ
யென்னைஇகழ்ந்தாளென்செயல்கொண்டாளென்பாயே

(திருவருட்பா)

(இ-ள்) பொன்னை இருத்தும் பொன் மலர் எகினப் புள்ளே—லெக்ஷ்மி வாசம் செய்யும் அழகிய தாமரை மலரிலுள்ள அன்ன பக்ஷியே! நீ அளிக்கும்—ரட்சிக்கின்ற; தண் தணி கேசர் தம் பால் போய்—குளிர்ச்சி பொருந்திய திருத்தணிகையில் எழுந்தருளி இருக்கின்ற முருகக் கடவுளினிடத்தில் போய்; அன்னை இகழ்ந்து அங்கு அலர் செய்வான் அனுராகம் தன்னை—தாயானவள் இகழ்ச்சி செய்து பழிமொழி தூற்றுகிறதால் ஏற்பட்ட விசனத்தைச் சொல்லியும்; என்னை இகழ்ந்தாள்—அன்னத்தை வெறுத்தாள்; என் செயல் கொண்டாள் என்பாய்—உடல் வேளுத்தாள் என்று சொல்லுவாயாக.

# நவீன அகராதி.

( ஸ்கேலிடன். )

( 342-ம் பக்கத்தொடர்ச்சி. )

**இயந்திரம்:–** நாகரீகபூதம்; "காந்தி"யின் விரோதி; குடிசைத்தொழிலின் சங்காரி; மூளையின் முயற்சி; முதலாளிகளின் பொக்கிஷம்; இரும்பின் அட்டகாசம்; இந்தியாவைச்சுரண்டும் கரண்டி.

**சகுனம்-** அசட்டுஞானம்; புருடா; கண்ணுப்பூச்சி; பயங்கொள்ளித்தனம்; பேடிசாஸ்திரம்; முட்டுக்கட்டை; அகழ்; செத்தபாம்பு; காட்டுப்பொம்மை.

**ஆரம்பப்பள்ளிக்கூடம்:–** சிறுவர் கூடம்; விளையாட்டு நிலம்; சயனக் கிரகம்; குய்யோமுய்யோ; பாலர் சந்தை; கிஷ்கிந்தை; ஸ்தலஸ்தாபனங்களின் பந்து.

**உயர்தரப்பாடசாலை:–** தலைப்பாகை மடம்; வேலையற்றோர் விளையும் வயல்; டப்பாச்சாரிகளின் தாயகம்; அலங்கார கல்வி; ஜெர்மன் வெள்ளி.

**உயர்தர நீதிமன்றம்:–** வட்டிக்குப் போட்டி; வேதவாக்கு; வழக்கறிஞர் மார்க்கட்; அமராவதி; உல்லாச நீதிக் கூடம்.

**ராணுவம்:–** தேசபூதம்; கோவில் காளை; வரிவிழுங்கும்யானை; தண்டம்; சிலையில்முடிந்த தீ; வளர்த்தகடா; அரசாட்சிக் கவசம்; அரசாங்க மாப்பிள்ளை; அழையா விருந்து.

**கிராமம்:–** பிரத்தியக்ஷ நகரம்; சக்கை; நகரங்களின் கறவை மாடு; அரசாங்கத்தின் அஸ்திவாரம்; தரித்திர நாராயண க்ஷேத்திரம்; அப்பாவிகளின் காட்சி; பரிதாபப் பகுதி; துன்ப சாகரம்.

**மின்சார விளக்கு:–** நகர அணி; 'எடிசன்' தானம்; விஞ்ஞானத்தேட்டம்; செயற்கை மதி; மண்ணெண்ணெயின் சத்துரு; பரமபதசாதனம்; மேனாட்டின் பொலிவு.

இராமாயணம் பாரதம்:— எழுதப்படிக்க ஏற்பட்ட கதைகள்; அத்தை பாட்டி கதைகள்; ஆபாசநீதிகள்; அறியாமைச் சிகரம்; பண்டைப்பெருமை, காலாவதியாய்ப்போன விருத்தாந்தங்கள்; வேண்டா நூற்கள்; கற்பனையின் சிகரம்; புலவர் சொத்து; ஜாதி, மத, நீதிபேத சாகரம்; கிணற்றுத்தவளையின் பெருமை; பின்னேற்றப்பாதை.

தண்ணீர்க்குழாய்:— தெருச்சண்டை; பாத்திரக்கடை; குற்றப்பெருக்கு; சமரஸமூலிகை; சேலைகளின் லீலை; வம்புக்களம்; அக்கப்போர்.

முதலாளி:— ஏப்பதாரி; தொந்திமயம்; சொல்லாளி; திமிர்; லோபிக்கூட்டம்; சூத்திரதாரி; தன்னரசு; காரியசித்தி; சோம்பேறி வம்சம்; ருசிகண்ட பூனை.

வரவேற்பத்தலைவர்:—முந்திரிக்கொட்டை; கர்வி; டம்பாச்சாரி; பெத்தப்பேர்; முதற்பூசை.

ஆசாரம்:— பூணூலலங்காரம்; புகையிலை ஸ்டோர்; நவநாகரீக போகம்; புலித்தோல்போர்த்த பசு; ஆஷாடபூதி வேஷம்; பட்டையடித்தல்; வெளிப்பூச்சு; 'கில்ட்' வேலை.

போதுநலம்:— தன்னலம் மறவாமை; சுயநலம்; வேட்டை; கொள்ளையடித்தல்; தட்டுதல்; பங்குபோடுதல்; பிழைக்கும் வழி; ஏமாற்றம்.

பூகம்பம்:— விஞ்ஞான சாஸ்திரிகளின் ஏமாற்றம்; வைசிராய் விசனிக்கும் சம்பவம்; இயற்கையின் சீற்றம்; ஆண்டி, அரசன், வலியவன், எளியவன், முதலாளி, தொழிலாளி, படித்தவன், பாமரன் சமமாகும் சஞ்சீவி; வேலையில்லாத் திண்டாட்டங்குறையும் வழி; அநுதாபப் பெருக்கம்; மானிடவாழ்க்கையின் மர்மம்.

---

## ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் "சித்தன்" பத்திரிகைப் பிரதிகள் விற்பனை செய்வதற்கு ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும். விபரத்திற்கு எழுதித் தெரியுங்கள்.

மானேஜர், "சித்தன்" பழனி. S.I.

# காதலின் வேகம்.

( S. சிவனையா, ஆசிரியர். )

நான் நேற்றுமாலை 4மணிக்கு வெளியான................
பத்திரிகை ஒன்றுக்கு 2-அணாக்கொடுத்துவாங்கித் தடதட வெனப்புரட்டி நுனிப்புல் மேய்ந்துகொண்டு மேலே போனேன். திடீரென என் பார்வை ஒன்றில் ஆழ்ந்து நின்றது. அதை மூன்றுமுறைபடித்தேன். அப்படியே மெய் சிலிர்த்துப் பெருமூச்செறிந்து சோர்வுற்ற என் மேனி நடுக்கம் அடைந்தது. என் கண்களிலிருந்து அருவிகள் ததும்பிற்று. கையில் பிடித்திருந்த பேப்பரும் நழுவித் தரையில் விழுந்தது. இவையாவுங்கண்டயான் உணர்வழிந்து பூமிமேல் சாய்ந்தேன்.

சரியாய் மாலை மணி 6-அடித்து 10-நிமிஷம். மெதுவாக என் கண்களைத் திறந்து பார்த்தேன். பிரமித்துப் போனேன். நான் ஒரு வில்வெட்டு மெத்தை விரிக்கப்பட்ட ஸ்பிரிங் கட்டிலின் மேல் ஓர் அழகியவீட்டில் மேல்மாடியில் தனித்து இருப்பதாகவுணர்ந்தேன். இது என்ன கனவோ, நினைவோ என ஐயுற்று கண்களை நன்றாய்ப்பிசைந்து விழித்துப் பார்த்தேன்; யான் பார்ப்பது உண்மையெனத்தெரிந்தேன். நான் எப்படி இங்கு வந்தேன்? இதென்னவிந்தையாயிருக்கிறது என நினைத்தவனாய் எழுந்து நானிருக்கும் மாடியைப் பார்வையிட்டேன். அம்மாடி எனக்குப்புதிதாக (முன்புபார்த்திராததாக)தெரிந்தது. அச்சமயம் என் மூக்கு அரிப்பெடுக்கவே ஓர் சிட்டிப்பொடி கொடுத்து என் நாசியை சரிப்படுத்த எண்ணி என் சட்டைப்பாக்கெட்டில் கைவிட்டேன். ஓர் கடிதம் இருந்தது. அதைப்பிரித்து விஷயத்தை கவனித்தேன். அதில்

என்தாருயிர் அழகேசா!

யான் யூனியன் பார்க்கில் உலாவ வந்தபொழுது அங்கு இன்று 5மணிக்கு நீ சோர்ந்து மதிமயக்கத்தோடு பூமியில் சாய்ந்து கிடந்திருந்ததைக் கண்டு கவலை கொண்டு வேண்டிய

சிகிச்சைகள் செய்தேன். ஒன்றிலும் உணர்வுபெற்று எழுந்திருக்காததினுல், உடனே என்னுடைய ப்ளஷரில் வைத்து யான் புதியதாகவாங்கியிருக்கும், இந்தவிட்டு மேல்மாடியில் உன்னைக்கொண்டுவந்து சேர்த்தேன். இங்கும் உமக்கு சில சிகிச்சைகள் செய்தும் பயன்படாததால் டாக்டரையாவது அழைத்து வரலாமென எண்ணி வெளியே செல்லுகிறேன். நான் வருவதற்குள் மயக்கம் தீர்ந்து ஒருவேளை எழுந்தால், தைரியத்தோடு இங்கேயே இரு. வெளியில் செல்லாதே உடனே வந்துவிடுகிறேன்.

உமது அன்பன்,
சுந்தரேசன்.

என்றெழுதப்பட்டிருப்பதைக் கண்டேன். மிகுந்த ஆச்சரியங்கொண்டு, என் நேசனின் பேருதவியை நினைந்து மனச் சந்தோஷத்தோடு சின்னேரம் அங்கிருந்தேனெனினும் பேப்பரில் கண்ணுற்றசெய்தி என்னை மறுபடியும் மயக்கத்திற்கு இழுத்தது. இச்சமயம், படிக்கட்டுகளில் ஏறி மேல்மாடிக்கு யாரோ வருஞ்சப்தம் கேட்டது. யாரெனக்கவனித்தேன். இருண்டு பருத்தமேனியும் விரித்ததலையும் உடைய ஓர் உருவம் முகம்மூடி அணிந்த விதமாய் யானிருக்குமிடத்தை நாடி வரக்கண்டேன். "சீக்கிரம் இதைவிட்டுவெளியேறு, வீட்டின் முன் உமக்காக கார்நிறுத்தப் பட்டிருக்கிறது. உன் மயக்கம் தீர்ப்பதற்காக டாக்டரை அழைத்து வருவதாக லட்டர் எழுதிவைத்து விட்டுப்போனவன், உன் சினேகிதனென்று நம்பாதே, அவன் உன்கொடிய விரோதி. உடனே புறப்படு. மற்றவைகளைப் பின்புசொல்லுகிறேன்.

உன் அந்தரங்க நண்பன்,
அமிர்தகுணன்

என்றெழுதப்பட்டிருந்த சிறு காகிதத்துண்டை என் கையில் கொடுத்துவிட்டு வெளியேறிற்று. இப்போது என் வசமிருக்கும் இரண்டு கடிதத்தில் எது என் உண்மையான நண்பனுல் எழுதப்பட்டது என ஆராய்ந்தேன். ஒன்றுந்தோன்றவில்லை. எப்படி இருப்பினும், வெளியேறுவதேநன்று, பின்புமற்றவைகளை யோசித்துக் கொள்ளலாமென எண்ணினவனுய், வாயிலில் தயாராய் புறப்படும் நிலையில் நின்றிருந்த

காரில் ஏறினேன். அதுவும் 50-மைல் வேகத்தில் பறந்தது. கொஞ்சநேரத்திற்குள் மரஞ் செடி கொடிகள் சூழப்பட்ட ஓர் இருண்ட வனத்திற்குள் காரிலிருந்து என்னைக் கால்நடையாக நெடுந்தூரம் அழைத்துச்சென்று, ஓர் மலையின் பிலத் துவாரத்தினுள் கொண்டுபோவதாக உணர்ந்தேன். மேல் நடக்கும் காரியம் இன்னதென யான் அறியாது போயினும் முன்னும் பின்னும் சிலர்கள் என்னைக் கவனித்தவிதமாய், மௌனமாக வருவதினின்று, ஏதோ பலமான ஆபத்தில் நாம் மாட்டிக்கொண்டோம் என்பவனுப் ஒரே இருள் மயமாயிருந்த மலைக்குகையினுள் நுழைந்து வெகுதூரம்வரையிலும் சென்றேன். கடைசியில் பொன்மயமாகப் பிரகாசிக்கும் லைட்கள் நிறையப்பெற்றதும், ஆயுத சாலைபோன்று வரிசையாக ஈட்டி, வாள், வேல், துப்பாக்கி முதலியவைகள் வைக்கப்பட்டதுமான ஓர் அறையின் மத்தியில், அழகாக அமைக்கப்பட்ட உயர்ந்ததோர் ஆசனத்தில் கம்பீரமான பார்வையோடு திடகாத்திரம் பொருந்தப்பெற்றவராய் பூமன்னர்களுக்குரிய பணிதிகளோடு, அமர்ந்திருக்கும் ஓர் ஆடவர்முன் நான் நிறுத்தப்பட்டேன். என்னுடன் வந்தவர்கள் தீர்க்க தண்டம் சமர்ப்பித்து நின்று எங்கள் தலைவா! தங்களின் ஆக்ஞைப்படி கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கும் இவன்தான் அழகேசன். இவனுடைய நண்பன் அமிர்தகுணன் என்பவன். ஏதோ நம்முடைய ரகசிய அரண்மனையைக் கண்டுபிடித்து முற்றுகை போட்டு நம்மனைவரையும் போலீசார்வசம் ஒப்பிப்பதற்காக வேண்டிய உளவுகள் தெரிந்து வருகின்றனும். அவனையும் கொண்டுவரும்படி தாங்கள் உத்திரவு பிறப்பிப்பீர்களானல் எங்கள்சூழ்ச்சியின் வல்லமையினுல் இங்கு கொண்டுவந்துவிடுகிறோம். உத்திரவைஎதிர்பார்க்கின்றோம்'' என்றார்கள். இதிலிருந்து இவர்களெல்லாம் கொள்ளைக் கூட்டத்தார்களென்றும், நடுநாயகமாக வீற்றிருப்பவன் இவர்களின் தலைவனென்றும் யூகித்துக் கொண்டேன்.

“நாளை இரவில் அவனை (அமிர்தகுணனை) சரிப்படுத்தி விடுங்கள். இப்பொழுது இவனைக்கொண்டுபோய் தனி அறையில் வைத்து ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள். மற்றவை நாளை தர்பாரில் பேசிக்கொள்வோம்'' என்ற

மொழி கொள்ளைக்கூட்டத்தலைவனிடமிருந்து வந்தது. அவ் விதமே தனியறையில் யான் வைக்கப்பட்டேன். என்னு டைய கவலைகளை எல்லாம் நினைந்து நினைந்து ஆறுத்துயரத் தோடு சோர்ந்து மயக்கமாக அவ்வறையில் விழுந்தவன் பேச்சுமூச்சில்லாது கிடந்தேன். அவ்வேளை யாரோஎன்னைத் தட்டி எழுப்புவதுபோல் தெரியவே எழுந்து கூர்ந்து கவ னித்தேன். மேல்மாடியில் முகமூடி அணியப்பட்ட விதமாய் கடிதம் கொடுத்துச்சென்ற உருவமே இதுவெனத் தெரிந் தேன். இப்பாதகன் இன்னும் என்னசெய்யவந்தானே? என எண்ணினவனாய் 'என்னவிஷயம்?' என்றேன். பயப்படாதே என்றுமேலும் யாதோசொல்ல அந்தஉருவம் எத்தனித்தது. "போதும் போதும் மூடம். உன் உறவுபற்றி வந்த யான் அடைந்த பலன் போதும். மாடியிலிருக்கும்போது எனது ஆப்த நண்பன் அமிர்தகுணன் எழுதின கடிதம்போல் ஒன்றை என்னிடங்கொடுத்து ஏமாற்றி அழைத்துவந்து கொள்ளைக்கூட்டத் தலைவனிடம் விட்டு அமிர்தகுணனையும் நாளை இரவில் கொண்டுவருவதாய் உத்திரவு பெற்ற பெரும் பாவியன்றோ! நீ" என்று கோபக்குறியோடு சொன்னேன். அவ்வுருவம்தன் டோப்பாமயிரையும், முகமூடியையும் நீக்கி தன் முகத்தை என்னிடம் காட்டி மறுபடியும் மூடிக்கொண் டது. அது எனது ஆப்தநண்பன் அமிர்தகுணனாகக் காணப் படவே பெரும் வியப்படைந்தேன். "உண்மையில் நமது நண்பன் அமிர்தகுணன்தானா? அல்லது கொள்ளைக்கூட்டத் தாரின் மாயாஜாலமோ?" என ஐயுற்றேன். என் சந்தேகந் தீர "ஆருயிர் தோழ! யான் உண்மையில் அமிர்தகுணன் தான். சந்தேகப்படாதே" என்றது.

"ஆனால் ஏன் என்னை இங்கு அழைத்துவந்தாய்?"

"நான் உன்னை அழைத்துவரவில்லை உனக்கு ஏதாவது ஆபத்துநேரக்கூடும் என நினைத்து கொள்ளைக் கூட்டத்தா ருக்கும் தெரியாமல் அவர்களில் ஒருவனாக உன்னோடு இங்கு வந்துசேர்ந்தேன்".

"ஆனால் நான் மேல்மாடியில் இருக்கும்போது உன் பெயரிட்டு என்னிடம் ஓர் கடிதம் கொடுத்தது யார்?"

"கொள்ளைக் கூட்டத்தாரைச்சேர்ந்த ஒருவன்தான் கொடுத்தான்".

"நீ அதை எப்படி அறிந்து பின்பற்றினாய்?',

"உன் மயக்கம் தீர்க்க, டாக்டரை அழைத்துவருவதாக வந்த நம் நேசன் சுந்தரேசன் டாக்டருடைய வீட்டுக்கு வரும்போது யான் அவனைச் சந்தித்தேன். நீ தனியேயிருப்பதாகவும் தான் டாக்டரிடம் சென்று திரும்புவதாகவும், கூறிச்சென்றான். யான் நேரே உன்னைப்பார்க்க வீட்டுக்கு வந்தேன். வீட்டுவாயிலில் கார் நிற்பதையும், காரினுள் முகமூடியணிந்த மூவர் ஏதோ ரகசியமாய்ப் பேசுவதையும், மற்றோர் உருவம் மெத்தைப்படிக்கூண்டை நோக்கிச் செல்வதையுங்கண்டேன். இவர்கள் கொள்ளைக் கூட்டத்தினராயிருக்கலாம்;ஏதோ நடக்கப்போகிறதென்று யூகித்து இவைகளின் உளவை அறிய வேண்டுமென அவர்களறியாது யானும் படிக்கூட்டில் ஏறினேன். முன் சென்ற உருவம் மெதுவாகக் கீழிறங்கி வந்தது. நான் தயாராக வைத்திருந்த மயக்க மருந்துப்பொடியை உருவத்தின் முகத்திற்கு நேராகத்தூவினேன். உடனே அது மயங்கிக்கீழே விழுந்தது. தாமதஞ் செய்யாது அதனுடைய அங்கிகளையும், முக மூடிகளையும் யானணிந்துகொண்டு, அவ்வுருவத்தை ஓரறையில் வைத்துப் பூட்டி உன் நிலையை அறிய உன்னிடம் வர எண்ணினேன். நீயும் கீழிறங்கிவந்து காரினுள் நுழைந்ததை அறிந்த யானும் உடனே காரில் உட்கார்ந்துகொண்டேன்".

"சரி, கொள்ளைக் கூட்டத்தாரெனத் தெரிந்தும் ஏன் இவர்களிடம் சிக்கிக்கொள்ள வைத்துக்கொண்டாய்? என்னைத்தடுத்து மேல்மாடிக்கு அழைத்துப் போயிருக்கலாமல்லவா?"

"ஆம், ஆனால், இக்கூட்டத்தாரால் நாட்டில் பெருங் கொள்ளையும், கொலையும், வாலிபப் பெண்கள் பரிமுதலும் ஏராளமாய் நடந்துகொண்டுவருகிறது. இதைப்பற்றி முன்னமேயே அறிந்திருக்கிறேன். எப்படியாவது இக்கூட்டத்தினரைப்பிடித்துப் போலீசார் வசம் ஒப்புவிக்கவேண்டும் என எண்ணிக்கொண்டிருந்தேன். இவர்களுடைய இருப்

பிடம் தெரியாதிருந்ததால் விபரமாகத் தெரிந்துகொண்டு மற்ற ஏற்பாடுகள் செய்வதற்காகவே உன்னைத்தடுக்காமல் இருந்துவிட்டேன்".

"ஆப்த நண்பா! யான் 5-மணிக்கு யூனியன் பார்க்கில் ஓர் பேப்பரில் "கொள்ளை! கொள்ளை! 5-லட்சம் ரூபாயும், அழகிய கன்னிகையும் கொள்ளை! இராஜேஸ்வரபுரியில் லட்சாதிபதியாகிய ......................அவர்கள் புத்திரி கமலாம்பிகையும் 5-லட்சம் ரூபாயும்............உ இரவு 10-மணிக்கு கொள்ளையடிக்கப்பட்டது. அன்றிரவே வீட்டு எஜமான் குண்டுக்கட்டாய்க் கட்டப்பட்டு குற்றுயிரோடு கிடந்தார் என்றும் தெரியவருகிறது. போலீசார் புலன் விசாரித்து வருகின்றனர். கொள்ளைக் கூட்டம் இதுவரை 40-முறை நகரில் கொள்ளையடித்தனர் என்றும், அவர்களைக் கண்காணித்துக்கொடுப்பவருக்குத் தகுந்தரிவார்டுகொடுக்கப்படும்" என்றெழுதப்பட்டிருந்ததைக் கண்டதும் எனது ஆருயிர்க் காதலியை என்று காண்பேன், கொள்ளைக் கூட்டத்தினர் கையில் சிக்கினவள் எப்படியானளோ? ஐயோ! தெய்வமே! என எண்ணினவனுய் மூர்ச்சையாகிக் கீழே விழுந்தேன். பின்பு விழித்துப்பார்க்கும்போது ஓர் வீட்டு மேல் மாடியில் இருக்கக் கண்டேன். இக்கொள்ளைக்கும் காரணம் இவர்களாகத்தான் இருக்குமா?"

"சந்தேகமா"

"சரி என்னைப்பார்ப்பதற்காக வீட்டுப்படிக்கட்டின் பக்கம் வரும்போது மயக்க மருந்துப்பொடி தூவினேன் என்றீரே. அதைக்கைவசம் வைத்திருக்கவேண்டிய அவசியத்தை எப்படி உணர்ந்தாய்?"

"நம்முடைய ஜென்மவிரோதி உதயசேனன் உன்னைக் கொள்ளைக்கூட்டத்தினர் வசம் ஒப்படைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதாகவும் கொள்ளைக் கூட்டத்தினர் அவனுடைய ஜாகைக்கு அடிக்கடி வந்துபோவதாகவும் யான் உளவறிந்தேன். அதிலிருந்து அவர்களைப் போலீசாருக்குக் கண்காணித்துக் கொடுப்பதற்கேற்ற முறைகளைக்கையாடி ஜாக்ரதையாக இருந்தேன். இன்று மாலை வெளியான விளம்பரத்திலிருந்து உன் காதலியின் சம்பவமும் தெரிந்தேன்.

ஆதலால் எதற்கும் கைவசம் மருந்து இருப்பது நல்லதென் றெண்ணி தயார்செய்து வைத்திருந்தேன்''.

"சரி; எனது காதலியை இப்பாவிகள் இங்குதானே வைத்திருக்கக்கூடும்!

"நான் அதுவிஷயத்தை விபரமாகத் தெரிந்துகொண்டு சொல்லுகிறேன். இப்போது அவர்கள் என்னைத் தம் கூட் டத்தில் ஒருவனென்பதாகக்கருதி உனக்கு உணவுகொடுத்து வரும்படி என்னை அனுப்பிவைத்தனர். ஆதலால் அதிக நேரம் நான் தாமதிக்கக்கூடாது. நீ இந்தஉணவை உட்கொள். மற்ற சங்கதிகளை அவர்களைக் கேட்டுக்கொண்டே தெரிந்து கொண்டு மேல் யோசித்துக்கொள்வோம்'' என்று சொல்லி விட்டு முகமூடி உருவம் போய்விட்டது.

ஆழ்ந்த சிந்தனையிலிருந்ததால் நேரஞ்சென்றது எனக் குத்தெரியவில்லை. என் கருத்திற்கிசைந்த காதலி கமலாம்பி கையை கண்ணால் காண்பேனு? அவளின் மென்மையான கரத்தால் யான் கட்டியணைக்கப்படுவேனு? குயில்போன்ற இனிய மொழியில் காதலா என்றென்னை அழைத்து அவ ளிதழமுதம் அவளால் பெறப்படுவேனு? அப்பாக்கியம் உண்டா? ஹே அனுதரக்ஷகா! என்று ஆருத்துயரிலாழ்ந்து குனிந்த பார்வையில் உட்கார்ந்திருந்தேன். அப்போது என் முன் ஓர் காகித மடிப்பு விழுந்தது. பிரித்துப்படித்தேன்.

"என் நேசா! கவலைப்படாதே. உனது உயரிய கமலாம் பிகை இங்கேதான் தகுந்தகாவலில் வைக்கப்பட்டிருக்கிருள். கொள்ளைக் கூட்டத்தலைவன் அவளை நேசிக்கப் பயங்காட்டி வற்புறுத்தியிருப்பதால், இன்று தனியே பிராணத்தியாகம் செய்துகொள்வதாக எத்தனிக்கும் சமயம் யான் அவளைத் தடுத்து உண்மையை உரைத்து நிறுத்திவைத்திருக்கிறேன். அவளும் உன்னுடைய ஞாபகார்த்தமாகவே உன்னைக் கண் ணில் காணும் நேரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருள். அமிர்தகுணனைக் கொண்டுவருவதாக வெளியேறும் கொள் ளைக் கூட்டத்தினரோடு யானும் ஒருவனுகச் செல்கிறேன். எப்படியும் அவர்களை போலீசார்வசம் பிடிபடச்செய்து சில

போலீஸ் வீரர்களுடன் சீக்கிரம் திரும்புகிறேன். தைரியத்தோடு இரு.

உ. தோழன்,
அ. கு"

என்றெழுதப் பட்டிருப்பதைக்கண்டு யான் அடைந்த ஆனந்தம் அளவேயில்லை. இக்காகிதத்தை ஒருவேளை கொள்ளைக் கூட்டத்தினர் கண்டுவிட்டால் காரியம் மிஞ்சிப்போகுமெனப் பயந்து, அக்காகிதத்தை வாயில்போட்டு நன்றாய் மென்று என் வயிற்றுக்கு ஓர் விருந்து செய்துவிட்டேன். பின்பு கொள்ளைக் கூட்டத்தலைவன் முன்னிலையில் (துராலோசனைச் சபையின் மத்தியில்) உறுவின கத்தியை என் தலைக்குமேல் பிடித்தவிதமாய் என்னிருபக்கங்களிலும் பின்புறமாக மூவர் நின்றுகொண்டு, என்னை கொள்ளைக் கூட்டத்தலைவன் முன்பு நிறுத்திவைக்கப் பட்டிருப்பதையும் என் அருமந்த காதலியை இருவர் அழைத்துவந்து தலைவனின் முன் வலது பக்கமாக நிறுத்துவதையும் கண்டேன். என் காதலி என்னை ஏறஇறங்கப்பார்த்துப் பெருமூச்செறிந்து, கண்களில் நீர் உகுத்து வாடிய முகத்துடன் பரிதாப நிலையில் இருந்ததைக் கண்ட யான், கொண்ட ஆத்திரத்தை என்னே என்று இயம்புவேன். இன்னிலையில் ஹே! அழகேசா! இந்தப்பெண் மணியை இதற்குமுன் நீ பார்த்திருக்கிறாயா"? என்று கொள்ளைக்கூட்டத்தலைவன் என்னைக் கேட்டான்.

நான் "ஆம் இவள் என்னுயிர்."

"உன்னுயிர் இவளிடமா இருக்கிறது?"

"ஆம்"

'இப்போது உன்னுயிர் என்கையிலன்றோ இருக்கிறது'

"என்னுயிரை நீ என்ன செய்யமுடியும்"?

'உன் தலைக்குமேல் என்ன இருக்கிறது? பார்த்தனேயா?'

'கத்திகள் நீண்டுகொண்டிருக்கின்றன'

'கத்திகள் கீழிறங்கினால்'?

என்னைக்கத்தியால்வெட்டவேண்டிய அவசியமென்ன'?

189924

'இப்பெண்ணை இன்னும் உன் காதலியாக ஏன் கருதுகிறாய்? நான் என் காதலியாகச் செய்துகொள்ளுவே இங்கு கொண்டுவந்திருக்கிறேனென்பதை நீ உணரவில்லையல்லவா?

'அது என்னிஷ்டமா'? என்றேன்.

'உன்னை ஏன் கேட்கவேண்டும்?' என்று என் காதலியின் பக்கம் திரும்பினான் கொள்ளைக் கூட்டத் தலைவன்.

'என்னின்பத்திற்குகந்த இளம்பெண்ணே! நீ நேற்றுக் கூறியபடி நீ முன்பு காதலித்தவனைக்கொண்டுவந்து நிறுத்தி இருக்கின்றோம் பார்த்துக்கொள். இன்றுடன் இவனுடைய ஆசையை விட்டொழி. என்னின்பத்தில் ஈடுபடு. இங்கு காணும் செல்வம் யாவும் உனக்கே சொந்தம். நீ இடும கட்டளைப்படி யானும் மற்றவர்களும் நடக்கத் தயாராயிருக்கின்றோம். கண்ணே! என் ஆசை மனைவியாயிருக்க இன்னும் என்ன தடை'?

''சீ! தூர்த்தப்பதரே! யான் என் காதலனைக்கண்டபின் இணங்குகிறேன் என்று சொன்னது உண்மையே. என் கற்பை இழந்து உன்னுடன்கூடிச் சுகிப்பதைக்காட்டிலும் உயிரை மாய்த்துக் கொள்ளலாமென எண்ணினேன். இறுதியாக என் காதலனை ஒருமுறை பார்த்துவிட்டாவது இறந்துவிடலாமென என் மனம் தூண்டிற்று. அதற்கும் உங்கள் பிரயாசையிலிருந்தே என் காதலனைக் கண்டுகொள்ளலாம் என்ற கருத்துடையவளாய்க் கூறினேனே ஒழிய வேறல்ல. என் தந்தையின் செல்வம் யாவும் கொள்ளைகொண்டதுமன்றி என்னுடைய கற்புக்கும் பங்கம் நினைத்த பாதகனே! யான் உன் இஷ்டத்திற்கு எள்ளளவும் இணங்கேனென்பதை உறுதியாக நினை. அநாதையான என் காதலருக்கும் எனக்கும் கருணாநிதியாகிய கடவுள் துணைபுரிவார்'' என்று பெருத்த ஆவேசத்தோடு கூறிவிட்டு என்னை நோக்கினாள் என் காதலி.

இவ்வேமாற்ற மொழியைக்கேட்ட கூட்டத்தலைவனின் முகத்தில் கோபக்குறிகள் தாண்டவமாடின. ஏதோ சொல்வதற்கு வாய்திறந்தவன் நாவெழாது பயந்தவன்போல் முகத்தின் வடிவம் மாறிற்று. என் பின்புறமிருந்து யாரோ சிலர் வேகமாக வருவதுபோல் தெரிந்தது. திரும்பிப்பார்க்க எத்தனித்தேன். "கத்திகளை கீழேபோடுவாயா? சுட்டுக்

கொல்லட்டுமா?" என்ற சப்தம் பிறந்தது. என்னிடம் நின்று இருந்தவர்கள் அப்படியே பதுமைபோல் நின்றுவிட்டனர். வந்தவர்கள் போலீஸ் படைகள் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். அவர்கள் எதையுங்கவனியாது முதலில் தலைவனையும் மற்றவர்களையும் இரும்புச்சங்கிலிகளால் பிணைத்தனர். பின்னர் அங்குள்ள பொருள்களை சோதனையிட்டனர் கடைசியாக கொள்ளைக் கூட்டத்தினர் குழாமனைத்தும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

யான் என் காதலி கமலாம்பிகை, நண்பர்கள் அமிர்தகுணன், சுந்தரேசன் முதலியவர்களோடு காதலியின் இல்லத்தை அடைந்தேன். அங்கு யாவரும் ஒன்றுபட்டு அளவளாவி ஒவ்வொருவரும் அடைந்த சுகதுக்கங்களைப்பற்றியும், அமிர்தகுணன் தகுந்த நேரத்தில் போலீஸ் வீரர்களுடன் கொள்ளைக் கூட்டத்திடை வந்துபுகுந்த பெருமையைப்பற்றியும் பேசிக்கொண்டிருந்தோம். பின்பு விட்டுப் பிரிந்த காதலியும் காதலனுமாக சம்பாஷிக்கட்டும் என்னும் நோக்கங்கொண்டு சிநேகிதர்களிருவரும் வெளிப்போந்தனர்.

யான் சின்னேரம் என் காதலியின் கரங்களைப்பற்றித் தமாஷாகப் பேசிக்கொண்டிருந்தேன். என் காதலி தனது மிருதுவான திருக்கரத்தால் என்னை மார்போடணைத்து 'காதலா! நாமிருவரும்பெரும் ஆபத்திலிருந்துநீங்கியது இன்பம்அநுபவிக்கும்பாக்கியம்இருந்ததாலல்லவா' என்று எனக்கோர் அழகிய முத்தம் கொடுக்கும் நோக்கத்திலிருந்தாள். யானும் அந்நோக்கத்தினனாய் காதலியின் வாயிதழோடு என் வாயிதழையும் வைத்து அழுத்தினேன். அப்போது என் முதுகில் யாரோ தட்டுவதுபோலத் தெரிந்தது. திடீரென எழுந்து பார்த்தேன். வீட்டில் எனது தலையணையை அணைத்துப் படுத்திருக்கக்கண்டேன். 'வண்டா இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறாயே நேரமாகவில்லையா'? என்று அதட்டினாள் என் தாயார். நான் கண்ணைத் துடைத்துக்கொண்டு 'அடபாபமே! யானடைந்த காதலின்பம் யாவும் கனவாகவா முடிந்தது' என வெட்கி மௌனமாகக் குளிப்பதற்கு கொல்லைப்புற கிணற்றுக்கேகினேன். சுபம்.

---

# தீண்டாதார் முறையிடும் தேவர்களின் ஆலோசனையும்.

( R. தனுஷ்கோடி, எலையமுத்தூர். )

ஆருயிர்க்காதல! அடியாள்மனம் அவதியுறுமாறு சென்ற ஞாயிறு சென்றவர் இதுவரை வாராததின் காரணம் யாது? என் மனம் பதருகின்றது, மக்கள் பசிப்பிணியால் வாடுகின்றனர். நம் பண்ணை எஜமான் பாடாடோப பயங்கரங்காட்டுகின்றனர். ஏழெட்டு நாட்களாகத் தாங்கள் பண்ணைவேலைக்குப் போகாததினிமித்தம் வேறு ஒருவரை நியமித்துக் கொண்டனரோ என்னமோ? தெரியவில்லை. நமது ஜாதிக் கூட்டம் ஒருவாறு முடிவுபெற்றதா? சொல்லுங்கள் என்று நீசஜாதியில்பிறந்த செல்லம்மாள் தன் கணவனைக்கேட்டாள்.

என் ஆருயிர் அன்பே! மலைபோல நானிருக்கும்போது இக்கஷ்டங்களெல்லாம் உனக்குபனிபோலல்லவா. கண்ணே? நான் இன்றுமுதல் இன்னும் இரண்டுமூன்றுவாரங்கள் வரை நம்முடைய எஜமான் பண்ணை (வயல்) வேலைக்குப்போக முடியாது. ஏனெனில் சேலத்தில் நடந்தேறிய நமது ஜாதிக்கூட்டத்தில் அனைவரும் ஒருங்குசேர்ந்து, உயர் ஜாதியார் செய்து வரும் இடுக்கண்களையும், அவர்களால் தாழ்த்தப்பட்டோர் படும் துன்பங்களையும் யாதாமொரு தேவதையிடம் கூறி அதற்கு ஒருவாறு முடிவு தேடவெண்டுமென நிச்சயித்துள்ளோம். ஆகையால் நானும் நமது ஜாதியாருடன் இதேநொடியில் புறப்பட வேண்டி இருப்பதால் உன்னிடம சொல்லி விடைபெற்றுப் போகலாமென்று வந்தேன் என்று சொல்லி முடித்த நமது செல்லம்மாளின் மணாளனும், ஆதிதிராவிட ஜாதியில் பிறந்தவனுமான சொக்கலிங்கம்என்பவன், மங்கையிடம் விடைபெற்று மறுகணமே தானும் தன் ஜாதித்திரளோடு ஒன்றுசேர்ந்து தாங்கள் செல்லவேண்டிய இடத்தை நோக்கிப் புறப்படலானார்கள்.

அந்தோ பரிதாபம்! இவர்கள் எண்ணத்தை ஈடேற்ற மூடமதியைப் பெற்றுள்ள உயர்குல தேவதைகளால் முடி

யாதோ? முடியுமென்ற பகுத்தறிவு ஒன்று உண்டானால் அவர்கள் ஏன் தங்கள் இஷ்ட தேவதைகளைத் தேடி அலைகிறார்கள்.

புறப்பட்ட தீண்டாதார் காடு, மலை, வனாந்திரமார்க்கங்களில் சென்றுகொண்டிருக்கும்போது எதிரில் வீணை ஏந்திய கைகளுடன் ஒரு முனிவர் வரக்கண்டு அவரிடம் தங்கள் கஷ்டங்களை எல்லாம் எடுத்துக் கூறினர். அதற்கம்முனிவர் உங்களுடைய கஷ்டத்தை நிவர்த்திக்கப் பார்வதிசமேதராய் தில்லையில் வீற்றுள்ள முக்கண்ணனால் முடியுமேயொழிய எம்போன்றவரால் முடியாதென்று சொல்லிவிட்டுத் தன் வழியே நடந்துகொண்டிருந்த அம்முனிவர் பின்வருமாறு யோசிக்கலானார். என்னே விந்தையிலும் விந்தை! பரம துஷ்டர்களாகிய இவர்களுக்காக நாம் பரிந்து பேசிவிட்டோமே, இருக்கட்டும். இவர்கள் கஷ்டத்தை நிவர்த்திக்க மகாவிஷ்ணு ஒருவரால்தான் முடியும். ஆகையால் இப்பொழுதே புறப்பட்டு வைகுண்டம் சென்று இக்காரியம் முடியாதபடி கலகம் செய்துவிடுகிறேன் எனத்தீர்மானித்துப் புறப்பட்டார்.

நடுநிசி பன்னிரெண்டு மணியிருக்கலாம். மக்களை காக்கும் மாதவன் மஹேஸ்வரன் ஆலயங்களில் ஒன்றாகிய தில்லை என்று கூறும் சிதம்பர நடராஜர் கோவிலின் சுற்று மதில்களும், மதில்களின் இடையிடையேஉள்ள கதவுகளும், ஓங்கிவளர்ந்தகோபுரமும், கோபுரத்தின்மேல்விவரித்துள்ள பதுமை வேலைகளும், கோவிலின் உட்புறத்திலுள்ள தூண்களும், தூண்களில் ஒட்டினாற்போல் அமைந்துள்ள, சிற்பியின் வேலைத்திறமையை விவரித்துக் காட்டவல்ல கற்பதுமைகளும், தங்கள் தங்கள் காரியங்களைச்செவ்வனே செய்து முடித்து ஓய்வு எடுத்துக் கொண்டதுபோல நித்திரையில் ஆழ்ந்துகிடந்தன. அச்சமயம் ஆறாத்துயரத்தில் ஆழ்ந்து வருந்தித் தவிக்கும் சிற்சில பாமர மக்கள் மேற்கண்ட கோவிலின் முன் பக்கமாக நின்று முறையிடுவோராயினர்.

ஆதியும் அந்தமுமிலா அரும்பெரும் ஜோதியே! அன்னமும் ஏனமும் காணா அகிலம் நிறை பொருளே! வெண்காட்டிற்கு விருந்தினனாய்ச் சென்ற வேந்தே! முப்புறத்தை

எரித்த முதல்வா! நந்தனுக்குக்காக்ஷி அளித்தநாதா வருவாய். வந்து எங்களின் கஷ்டத்தை நிவர்த்திப்பாய் என்று ஓலமிட்டழுத சப்தம் பார்வதிசமேதராய் வீற்றிருந்த பரமசிவத்துக்கு எட்டியது. அச்சமயம் கோவிலின் கதவுகளெல்லாம் படீர் படீரென்று திறந்தது. திறக்கவே அதனுள்ளிருந்து நடனேஸ்வரன் காளை வாகனரூடனாய்க் கையில் சூலமேந்தி சந்தோஷ முகத்துடன் வெளியில் வந்து "ஓ என் ஆருயிர் மக்களே! ஆழிசூழ் உலகம் அனைத்துக்கும் யாமே காரண புருஷராயிருந்து வேலை செய்துவருகின்றோம். அப்படி இருக்க யாது காரணத்தால் நீங்கள் இவ்வாறு வருந்தித் தவிக்கின்றீர்கள். உங்களுக்கு இடர் செய்தவர் யாவர்?" என்று வினவிய மொழிகளைக்கேட்ட தீண்டாதார் அனைவரும் நடுநடுங்கி, ஓ வழியில் நம்மிடம் முனிவர் சொல்லியனுப்பிய மகேஸ்வரப்பெருமான் இவர்தானோ என்று மனதிலெண்ணிக் கொண்டு ஒருவாறுதேறி ஐயா! நாங்கள் அதைத்தங்களிடம் புகல்கின்றோம்; கேளீர்.

கங்கையைத் தரித்த கண்ணாளா! நாங்கள் எக்காலத்திலும் நீச ஜாதியார்களென்றும், அடிமைத்தொழில் புரியும் வம்சத்தார்கள் என்றும், மூடமதியைப் பெட்டகமாகக் கொண்டுள்ள உயர்குலத்தோரால் கருதப்பட்டு வருவதும் அன்றி, எல்லாம் நம்மைப்படைத்த கடவுளின் பாகுபாடுகள் என்று தங்கள் தலையிலும் பழியைச் சுமத்திவிடுகின்றனர். சிற்சில பக்கங்களில் கிராமங்களின் உள்ளேகூட எங்களை விடுவதில்லை. (மலையாளம் ஜில்லாவில் நாயாடிகள் என்னும் வகுப்பாரை) கொம்புள்ளதற்கு ஐந்து முழம், குதிரைக்குப் பத்து முழமென்றால், எங்களை இருபது முழத்துக்கப்பால் நின்றுபேசவேண்டுமென்று சொல்லுகிறார்கள். நிற்க நாங்கள் அடிமைத்தொழில் புரிந்துவரும் வீடுகளில் அமாவாசையோ அல்லது திதியோ வந்துவிட்டால் எங்கள் வாயை ஊசி, நூல் முதலிய கருவிகளால் வேலைசெய்துகொள்ள வேண்டுமென்கிறார்கள். ஏனெனில் அப்படி விரதம் பூண்டவர்களிடம் பேசினால் உடனே விரதபங்கமாய்விடுகின்றதாம். என்னே எங்கள் பரிதாபம். கிராம உற்சவ காலங்களில் அவ்வுற்சவத்திற்கு அடிப்பீடமாகிய கோவில்களில் நுழைந்து சுவாமி தரிசனைசெய்ய விடுவதில்லை. அறியாத சின்னஞ்சிறுவர்க

ளாகிய எங்கள் குழந்தைகள் நுழைந்துவிட்டாலோ உடனே நீண்ட தடிச்சட்டம் என்ற நூற்று நாற்பத்து நான்கை, குழந்தைகளின் தாய்தகப்பன்மார்களாகிய எங்கள்மீது பிரயோகம் செய்துவிடுகிறார்கள். எங்களைக் காக்கவல்ல கருணாநிதியே! கிராமங்களின் பொதுக்கிணறு, குளம் முதலிய இடங்களில் எங்களுக்குச்சம உரிமைகிடையாது. நாங்கள்எக்காலத்திலும் இடையில் தரித்துள்ள ஆடையை முழங்காலுக்குக் கீழே தொங்கவிட்டு உடுத்தியிருக்கக்கூடாது. இதற்கு மாறாக நடந்துகொண்டால் உயர்குலத்தோரின் பொறாமைக்கும், கொடுந்துன்பங்களுக்கும் பாத்திரர்களாகின்றோம். மாதம் மும்மாரி பெய்து வளங்கள் மிகுந்திருந்தாலும், எங்களுக்கு அரை வயிறு கஞ்சி கிடைப்பது அரிதாயிருக்கிறது. எறும்பு முதல் யானைவரையுள்ள எண்பத்தீராயிரங்கோடி ஜீவராசிகளையும் காப்பாற்றவல்ல கர்த்தனே! இப்பகுதியில் எங்களுடைய கணக்குகள் சேர்க்கப்படவில்லையோ? காப்பாற்றும். கந்தன் தந்தையே! ஏழைகளைக்காப்பாற்றும். கருணைக் கடலே காப்பாற்றும் என்று பலவாறாக இறைஞ்சி நின்றனர். இதுகாறும் மௌனம் சாதித்த அலர்மேலுமங்கை அம்மையார் கண்ணீர் ததும்பிய முகத்துடன் காளை வாகனத்தை விட்டுக் கீழிறங்கி வந்து என் ஆருயிர்ச் செல்வங்களே! உங்களைக் காக்கவல்ல சக்தி என் காதலர் கைலாசபதிக்கிருந்த போதிலும் அந்தக் கர்மாவைத்தாங்கி துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்பவர், என் தமையனும், வைகுண்டவாசனுமாகிய ஸ்ரீ கண்ணபிரான் ஒருவரே தான். ஆகையால் உங்களைக் காப்பாற்றுவதாகக் கங்கணம்பூண்டுள்ள நான் அங்கு சென்று அவருடன் கலந்துபேசி உங்கள் கஷ்டத்தை நிவர்த்திக்கச் செய்கிறேன். நீங்களும் என்னுடன் கூடவே வாருங்களென்று ஆசிகூறிய அம்மையும் ஆதிபரஞ்சுடராகிய சிவபெருமானும் காளைவாகனத்தின்மீது ஆரோகணித்து ஆகாயமார்க்கமாகப் புறப்பட்டார்கள்.

க்ஷீராப்தி நாதனின் திருவருளைப் பெறலாமென்ற ஆவலாலும் மலைநாதன் கொடுத்த வரப்பிரசாதத்தாலும் தீண்டாதாரும் ஆகாயத்தில்பறந்துசெல்லும் உரிமையைப்பெற்று யாவரும் வைகுண்டமடைந்தார்கள். அடைந்த ஹரிஜனங்களின் மனம் பரவசமடையும்படி தாங்கள் முன்வணாந்திரத்

இல்கண்ட முனிவரை(நாரதர்)யும், நான்முகன், எமதருமன் முதலிய தேவர்களையும் வைகுண்டபதியின் பக்கத்தில் வீற்றிருப்பதைக் கண்டார்கள்.

திரிகால உணர்ச்சிபெறற் நாரதராலும், தன் சகோதரி உமாதேவியாலும் இக்காரியங்கள் அனைத்தையும் அறிந்த நாரணன் தன்பாலடைந்துள்ள நரர்களைநோக்கி, வருமைப் பிணியில் வருந்தும் ஆன்மாக்களே உங்களுக்கு நேரிட்டிருக்கும் துன்பங்களனைத்தையும் இப்பொழுது இச்சபையின்கண் என்சகோதரி உமாதேவி கூறிய கூற்றிலிருந்து உணர்ந்தேன். அறிந்தாலும் ஐந்துபேரைக் கேள் என்ற பழமொழிப்படி இதோ என் எதிரில் வீற்றிருக்கும் தேவர்களாகிய இவர்களும் நானுமாக ஆலோசித்த பின்பு உங்களின் கஷ்டத்தை நிவர்த்தி செய்கிறேனென்று கூறியபின் நாரதரைநோக்கி நாரதரே! இவர்கள் தீண்டாமைப் பேயினின்றும் விலகி பரதகண்டமெனப் புகழும் இந்தியாவில் சம உரிமைபெற்று விளங்குவதற்கு உம்மிடம் ஏதாவது மருந்துகள் உண்டா! என்று வினவினர்.

நாரதர் - தேடக்கிட்டாத் தெள்ளமுதே! தீண்டாதார் எக்காலங்களிலும் அசுத்தமாகவும் சோம்பேரிகளாகவும் நடந்துகொள்ளும்குணமுடையவர்கள். ஆவின் இறைச்சியில் அதிகப்பிரியர். மட்டிலடங்கா மதுக் குடியர்கள். இவ்வாறு நடந்துகொண்டால் எப்படி வறுமைப் பிணியிலிருந்து விலக முடியும் என்று தற்கால நாகரீகம்படைத்த உயர்குலப் பேய்கள் தீண்டாதார்மீது எடுத்துரைக்கும் பொறுமைச் சொற்களைப்போல எடுத்துரைத்தார்.

கோபம் மிகுந்த கண்ணன் நாரதரைநோக்கி முனிவரே வேண்டாம். தீண்டாதார் பழியை ஏற்றுக்கொள்ளாதீர். எளியோர் விடுத்த கண்ணீர் கூரிய வாளையொக்கும். என்ற பழமொழிக்கு இலக்காகாதீர். குளம், கிணறு முதலிய ஜல ஸ்தாபனங்களில் உயர் குலத்தோருக்குள்ள உரிமையைப்போல் தீண்டாதாருக்குமிருக்குமாகில் அவர்கள் ஏன் அசுத்தமாகவும், உடுத்திய கந்தையைத் தோய்த்து உடுத்த வழியில்லாமலும் திரிகிறார்கள். அசுத்தமே சோம்பேரித்தனத்துக்கும் வழிகாட்டியாக உதவும். நிற்க ஆவின் இறைச்

சிக்கும் ஆட்டின் இறைச்சிக்கும் வித்தியாசம் கூறுபவர் உம்மைப்போலொத்த மூடர்களேதான். இறைச்சியே இடர்கள் அனைத்துக்கும் காரணம் என்பதை மறந்தீர்போலும். இரண்டாவதாக மதுக் குடியைப்பற்றி ஏதோ சொல்லவந்தீரே! கீழ்மக்கள் ஏழைகள் ஆதலால் அவர்கள் மண் பாண்டங்களிலும் கொட்டாங்கச்சிகளிலும் (தேங்காயின் மேல் மூடி) மதுவைக் குடிக்கிறார்கள். உயர் குலத்தோரோ பணக்காரர்கள் ஆகையால் பாட்டில்களிலும், கண்ணாடி டம்ளர்களிலும் கள்ளைக் குடிக்கிறார்கள். இவ்வளவுதான் வித்தியாசம். என்று கூறிவிட்டு நான்முகனை நோக்கி, படைக்கப்பட்ட தேவே இதைப்பற்றி உம்முடைய அபிப்பிராயம் என்ன என்றார்.

நான்முகன்-மூவுலகளந்த முகற்பொருளே! நான் ஆதியில் மானிடரை உற்பத்தி செய்யும்போது, உயர்ந்தவர், தாழ்ந்தவர், பார்ப்பார், பறையர், மகம்மதியர், தெலுங்கர் இவ்வாறு பற்பல ஜாதிகளாகப்பிரித்து உற்பவம் செய்யவில்லை. அப்படி அநேகவிதமான ஜாதிகளை உற்பத்திசெய்திருந்தால், பசுவுக்குக் கொம்பும், யானைக்குத் துதிக்கையும், புலிக்கு நகமும், கொடுத்திருப்பதுபோல ஜாதிக்குத்தகுந்த அவையவங்களும் கொடுத்திருப்பேன். ஜாதி வேற்றுமை என்பது என் படைப்பிற்குப்பின் அநேக மேதாவிகளால் தொழிலுக்காகப் பிரித்துக்கொண்ட பிரிவினைகள். அப்பிரிவினைகளோ! தற்போது, வரவரமாமி கழுதைபோலானாள் என்பதுபோல மானிடர் மதஸ்தராகி, மதம் ஜாதியாகி, ஜாதியில் உயர்ந்தவர் தாழ்ந்தவரென மாறிவிட்டது. இவைகளெல்லாம் அறியாமை என்னும் மூட மதியால் செய்துவருகிறார்கள் என்று கூறி முடித்தார்.

பிறகு கண்ணன் - தென்திசைக் கடவுளை நோக்கி, காலதேவ, இவர்களைக் காப்பாற்றும் வழியைப்பற்றி நீர் கொண்டுள்ள நோக்கமென்ன? என்று கேட்டார்.

காலதேவன் - நாராயணா! உயர் குலத்தோர் ஹரிஜனங்கள்மீது சொல்லும் ஒவ்வொரு கடுஞ்சொற்களையும், செய்துவரும் பற்பல கெடுதல்களையும் நன்மை, தீமைகளையறிந்து அதற்குத்தகுந்தவாறு தண்டித்து வருகிறேன். உதாரணமாக, தீண்டாதாருக்கு ஜலத்தில் சம உரிமை கொடாத உயர்

குலத்தோரை என் இருப்பிடம் அழைத்துவந்தபின் அவர்களை ஆலையிலிட்டு அரைத்து இரத்தம், தசை, நார் நரம்பு, முதலியவைகளை முறையே தண்ணீராகவும், எருவாகவும் என் நந்தவனத்துக்கு உபயோகப்படுத்துகிறேன். நிற்க, தான் பெற்றுள்ள பண ஆசையின் நிமித்தம் எளியோரை வாட்டி வதைக்கும் பேராசைப் பதர்களைப் பூதக்கிடங்குகளில் தள்ளியும், அனேகவித விஷப்பாம்புகள் குடியிருக்கும் குகையினுள் அடைத்துவைத்து அவைகளால் அவர்களுக்குக் கொடூர துன்பம் விளையும்படியாகவும் செய்கிறேன். ஐயனே! இவைகளெல்லாம் என்னிடம் வந்தபின் நடத்தப்படும் செயல்கள். எனவே அவர்கள் ஜீவித்திருக்கும்போதே தூய்மைபெற்று விளங்கவேண்டுமோனால், துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனராகிய உம்மால்தான் முடியும் என்று கூறினர்.

தேவர்களின் ஆலோசனையைக்கேட்ட கண்ணன், தானுஞ்சிறிதுநேரம் ஆலோசனைசெய்தபின்பு ஹரிஜனங்களை நோக்கி மக்களே! உங்களை ரக்ஷிக்கும்பொருட்டு வடதிசையில் குஜராத்மாகாணத்தில் குட்டிக்குடும்பமொன்றில் மொட்டை மானிடனாக அவதரித்துளோம். அம்மொட்டை மனிதனுக்கோ உங்களின் நிமித்தம் ஊரூராகச்சென்று சேவை புரிந்து உடல், பொருள், ஆவி என்ற மூன்றையும் தத்தஞ் செய்ததுமல்லாமல் தலை சொட்டையுமாய்விட்டது. நிற்க, க்ஷேத்திரத்தின்கண் மகிமைபெற்றதும், முதன்மை வாய்ந்ததுமான பழனியம்பதியில், ஒரு வைத்தியபதிக்குப் புதல்வனாகச் "சித்தன்" என்னும் நாமதேயத்துடன் உற்பவித்துளோம். இவர்கள் இருவரால் உங்களுடைய கஷ்டங்கள் அனைத்தும் சூரியனைக்கண்ட பனியைப்போல் நீங்கும். இனிமேல் நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை என்று

திறமுடன் வார்த்தையைத் திருமால் கூற,
அம்மையும் ஐயனும் ஆனந்தம் பெற்றபின்,
நன்று நன்றென்று நாரதர் சொல்ல,
இழிகுலர் யாவரும் இல்லகம் சேர்ந்தனர்.

தீண்டாமைக்குக் காரணம், செல்வத்தின் செருக்கும், மூளையின் கிறுக்குமேயாகும்.

# அந்தகாரம்—யாருமேயில்லை.

இனியதோர் சிறுகதை.

கோவை, திரு. சி. கு. நாராயணசாமிமுதலியார் அவர்கள்.

நெருங்கிய தருக்கள் நிறைந்ததும், மிகவும் குளிர்ந்ததுமான அழகிய சோலையில், கன்னங்கரிய குயில் ஒன்று தன்னுள் எழுந்த எல்லையற்ற ஆனந்தத்தால் தனது தீங்குரலால் "கூ கூ" எனக் கூவிக்கொண்டிருந்தது. அப்பொழுது பிரபஞ்சம் அனைத்தும் மூர்ச்சித்தனவோவென்று எண்ணத்தக்கவாறு நிஸ்ஸப்தமாகவிருந்தும், ஒருவித சிருங்காரமான காந்தியுடன் அப்பிரதேசம் விளங்கிக்கொண்டிருந்தது.

பஞ்சமஸ்வரத்தோடு கூவிக்கொண்டிருந்த அக்கோகிலத்துவனி, சிறிது நேரம் கேட்கப்படவில்லை. மறைந்துபோயிற்றா? இல்லை. செவிகள் அவ்வினிய ராகத்தைத் தியான லோகத்தில் சிரவணித்துக் கொண்டிருந்தன. இளந்தென்றல்கள் அவ்வப்போது நிர்மலமான நீர்நிலையங்களினின்றும் மெல்லென அசைந்து எழுந்து வரும் ஓசையினால், இளந்தளிர்கள் கலகலவென ஓசை செய்யத்தொடங்கின. வெண்கதிர் தாங்கிய கலாநிதி, ககனவட்டத்தில் மேகபடலத்தில் ஒளிந்தும்; மரக்கிளைகளின் இடையில் தோன்றியும், மறைந்தும்; பாலசேஷ்டையில் ஈடுபட்ட சிறுவர்களின் செய்கையையொப்ப விளங்கிக்கொண்டிருந்தான். அவனது இனிய செய்கைகள், மனோல்லாசத்தையும் மகத்தான ஆனந்தத்தையும் விளைவித்துக்கொண்டிருந்தன.

இவ்வேளையில் லாவண்யநிதியான ஒரு யௌவன மாது அங்குத்தோன்றினாள். அம்மாது நல்லாள் யாவள்? சுந்தரமிகுந்த அத்தோகையின் அழகிய நீலவிழிகளினின்றும் துலங்கும் தண்ணிய பார்வையானது, பார்ப்போர் உள்ளத்தை பரவசப்படுத்தும்படியாக இருந்தது. மாணிக்கமணிபோற் சிவந்த தனது மெல்லிய உதடுகளில் தவழும் புன்னகை துறந்தோருளத்தையும் துளங்கச் செய்வதாய்

விளங்கிற்று. இந்நிலையில் வானவீதியில் விளங்கும் வெண்ணிலா ஒருபக்கம் தோன்றியும், மற்றொருபுறம் மறைந்தும், குவலயேந்திரனுடன் கண்ணும்பூச்சி விளையாடிக் கொண்டிருந்தான். இளந்தென்றல்கள், தங்களை இடையில் வழி மறிக்கும் பனிப்படலங்களின் தண்ணிய சீதளத் தன்மையின் ஆற்றலுக்கு எதிர்நிற்கும் திறனழிந்து, மெதுவாகத் தப்பியோட நினைந்து அம்மெல்லியலாளின் சேலைக்கொசுவத்திலும், முந்தானையிலும் ஒளிந்து புறங்காட்டிச்சென்றன. இவையனைத்தும் மனோல்லாசமாயிருந்தன. ஆனால், அம்மானினியாவள்? பதிதபாவனையா? சகலலோகரக்ஷகியா? எனது பங்கின் பாக்கிய தேவதையா? இவையெல்லாமேயல்ல; என்னையாளவந்த இந்திராணியே ஆம்.

சிறிது சிறிதாக அச் சிருங்காரவனிதையின் துப்பிதழ்கள் அசைய ஆரம்பித்தன. ஓசை காதில் விழுந்தது. செவிக்கு நல்விருந்தூட்டும் அவ்வினிய மொழிகள், முத்து முத்தாகவும், அமுதமயமாகவும் இருந்தன. அச்சொற்கள்வர வர விசேடமானதொனியுடன் கேட்கப்பட்டன. ஒவ்வொரு சொற்களும் ஒவ்வொரு வாக்கியங்களும் தெளிவும், இனிமையும் கூடிய நாதஸ்வரத்துடன் விளங்கின. ஆஹா! சுகுமாரமன்ன அச்சுந்தர மாதின் தேவகானம் என்ன இனிமை? என்ன கம்பீரம்! அது கானமா? இல்லை; அது ராகமா? அதுவுமில்லை; மற்றென்ன? அது மானவ கோடிகளை மதிமயக்க வல்ல மோகனாஸ்திரம்.

இன்பசாகரத்தில் இனிது ஆழ்த்தவல்ல இவ்விள மங்கையின் நிர்மல காந்தர்வம் யாருக்கு வேண்டியது?

இன்ப ஊற்றுப்போன்ற இவ்வினிய கானம் எனது செவிகளை நிறைத்து வெறுக்கமுடியாத ஆனந்தத்தை அளித்தது. அப்பருவமாதரான் பாடுவதை நிறுத்திச் சுவற்றில் தீட்டிய சித்திரம்போல் என்னை நேரேயே நின்று கொண்டிருந்தாள். அவள் நின்ற நிலை எனது கருத்துக் கிசைந்து கருணை சாதிப்பவள்போல் காணப்பட்டது. நான் பெரிதும் பரவசமடைந்தேன். அவள் என்னிடத்து யாதும் பேசாமலிருந்தும் நான் நின்ற நிலை பெயர்ந்து அடிமேலடி வைத்து அவளருகிற் சென்றேன். சென்ற நான் அவளை ஆலிங்கனம் செய்வதா? அல்லது அவளது அடித்தாமரை

யைப்பற்றி அஞ்சலி பண்ணுவதா? இன்னது செய்வதெனத் தோன்றாது மனது ஊசலாட, யோசனையிலாழ்ந்தியவன் ஆனேன்.

உயிரிருந்தும் அவ்வுயரிய உருவம், ஓவியம்போல் அசையாமல் நின்றநிலையிலேயே விளங்கிக்கொண்டிருந்தது. எனினும், அவள் நயன கோசரமட்டும் நான் இடும் கட்டளை எதுவாயினும், அதனைச் சிரசாக வகித்து நடக்கப் பூரண விருப்பம் என்பதை விளக்கிக் கொண்டிருந்தது. வாய் மட்டும் பேசாது மௌன நிலையை மேற்கொண்டிருந்தாள்.

எனக்கும் ஒன்றும் தோன்றாததால், நான் இறுதியாக முழங்கால்மண்டியிட்டுஅவளது மெல்லியமலர்த்தாளை வணங்கினேன்............. அதனை அன்புடன் அங்கீகரித்தவளாகி எனது முகத்தை முதிர்ந்த அன்புடன் ஏறிட்டுப்பார்த்தாள். நானும் அதுபோலவே, அகங்குழைந்து ஆதரத்துடன் நோக்கினேன். இருவர் திருஷ்டியும் நெருங்கிச் சந்தித்தன. என்னென்றியம்புவது? கடுமையான காரிருள்! யாருமே இல்லை.

---


"சுசீலா"

சுகந்த வாசனைத் தைலம்.

நூதனமுறைப்படி தயாரிக்கப்பட்டது. இது கூந்தலை கருமையாக வளரச்செய்யும். ரோமம் உதிர்தல், தலையில் உண்டாகும் பொடுகு முதலியவைகளை நீக்கும்.

புட்டி 1–க்கு விலை அணா 10.

கிடைக்குமிடங்கள்:-

உடுமலை K. S. ராமனாத அய்யர், ஹோட்டல், பழனி.

பீம விலாஸ், அடிவாரம், பழனி.

# மாதர் பகுதி.

## மணப்பெண் யோக்கியதை.

(தோழர், A. B. ஆதித்தர்)

---

நார்வே தேசத்தில் ஒவ்வொரு பெண்ணும் விவாகமாவதற்கு முன் தனக்கு நன்றாகச் சமையல் செய்யத்தெரியுமென்று குறிப்பிடுகிற ஒரு யோக்கிதாப் பத்திரம் வைத்திருக்கவேண்டுமென்பது அரசாங்கக் கட்டளையாம். நம் நாட்டுப்பெண்கள் அரசாங்கக் கட்டளை இல்லாமலே சமையல் வேலையில் சிறந்தவர்களாய் இருப்பது போற்றத்தக்கதே. ஆனால் இவர்கள் கல்வி கற்காததால் மிகவும் வருந்தத்தக்க நிலையில் நாள் முழுவதும் புறம்பேசுவதிலும், வீண் வார்த்தைகளைப் புலம்புவதிலும் காலங்கழிக்கிறார்கள். வீண் பேச்சையும், சட்டி சுரண்டுவதையும் தவிர வேறொன்றையும் இவர்கள் அறியமாட்டார்கள். சட்டியைச் சுரண்டாவிட்டால் வயிறு பட்டினிதானாகையால் சுரண்டவேண்டிய நேரத்தில் சட்டியைச் சுரண்டவேண்டியதுதான். மற்ற நேரங்களில் வேறு காரியங்களைப் பார்க்கலாம். ஆனால் கல்வியறிவில்லாத ஒரு பெண் கணவனுக்குத் துணைவியாக இருந்து தகுந்த இன்பத்தைக் கொடுக்கவோ, பெறவோ முடியாது. வீட்டை சுத்தமாகவைத்திருக்கவோ, குழந்தைகளை ஒழுங்காக வளர்க்கவோ அவளுக்குத் தெரியாது. அவள் சட்டிசுரண்டுவதைத் தவிர வேறொரு காரியமும் அறியாள். ஆகையினாலேயே காலஞ்சென்ற வேதநாயகம்பிள்ளை அவர்கள் தமது பாடலில்

> "எழுத்து வாசனையறியாதவள் மட்டி
> எதுக்கு முதவாளவள் சுரண்டுவாள்சட்டி
> கழுத்திலே அவளுக்குத் தாலியைக்கட்டி
> காரியமில்லையது காசுக்கு நட்டி"
>
> (நல்ல பெண்ணைப் பார் நீ தூதா)

என்று விளம்பியுள்ளார். சட்டியைச் சுரண்டிக்கொண்டிருப்பதுடன் நின்றுவிட்டாலும் பரவாயில்லை. சமயத்தில்

சட்டியைச் சுரண்டாமல் போட்டுடைப்பாள். மற்றவர்களை உபவாசமிருக்கச்செய்து தானும் பட்டினி கிடப்பாள். ஆகையால் கல்வியறிவில்லாத ஒரு பெண்ணை மணப்பது வாழ்க்கைத்துறையில் கஷ்டத்தையும், நஷ்டத்தையுமே கொண்டு வைக்கும். இன்று நம் நாட்டில் இவையெல்லாம் சர்வசாதாரணமாக நாம் காணும் காக்ஷியாக இருந்துவருகிறது. "பெண்கள் அஞ்ஞானத்திலும், அறியாமையிலும், குருட்டு நம்பிக்கைகளிலும், துன்பத்திலும் ஆழ்ந்து முக்காடிட்டு மூலையில் முடங்கிக்கிடக்கும்வரையில், ஒருதேசமோ அன்றி, சமூகமோ முன்னேற்றத்தையும், சுதந்தரத்தையும் அடையப்போவதில்லை" என்று திருமகள் ஹாகம் கூறியது உண்மையேயாதலால் படித்த வாலிபர்களாவது படித்த பெண்களையே மணம் செய்து வாழும்படியாக வேண்டிக் கொள்ளுகிறோம்.

---


# இனும்! விளம்பரம் இனும்!

## வியாபாரிகளே!

### நீங்கள் லாபம் அடைய இது ஓர் வழி.

உங்கள் கைத்தொழில் பொருள்களையும், சாமான்களையும் நாங்களே விளம்பரஞ்செய்து விற்று வருவதால் புத்தகங்கள், இதர சாமான்கள் தயாரிக்கும் நேயர்கள் தங்களுடைய சாமான்களையும், பொருள்களையும் எங்கள் காரியாலயத்தில் வைத்து நாங்கள விற்பனை செய்வதற்கும், விளம்பரஞ்செய்வதற்கும் கமிஷன்கொடுத்து நீங்களும் லாபம் அடையுங்கள்.

மானேஜர்.

# சொத்துரிமை.

(தோழர், A. B. ஆதித்தர்.)

வாசகர்களே! வாழ்க்கை நடத்துவது இன்பத்துக்கே அன்றி துன்பத்துக்கல்ல. துன்பகரமான வாழ்க்கைத்தோற்றத்தைக் காணுந்தோறும் அதனைத்தொலைப்பதற்கு நாம் பல வழிகளிலும் யோசிக்கிறோம். நாம் அறிந்தவரையில் இன்று காணப்படும் கல்யாணங்களெல்லாம் இன்ப வாழ்வை நல்காது துன்பவாழ்வையே தருபவைகளாயிருக்கின்றன.

பல சாதாரணக் குடும்பங்களில், ஏன், பெரிய குடும்பங்களிலும் பெண் பிறவி பாபமாகவும், பாரமாகவும் கருதப்படுகிறது. எவ்விதமும் பெண்களுக்கு கல்யாணம் நடத்திவிடவேண்டுமென்று காலாகாலத்தில் பெற்றோர்கள் கருதுகிறார்கள். அக்கருத்திடையே கவலையும் கப்பிக்கொள்கிறது, கல்யாண காலத்தில் பெண்ணும், பெண்ணுடைய பெற்றோர் உடன்பிறந்தார்கள் எல்லாம் கவலையில் மூழ்கி இருப்பதை நாம் கண்டும் கேட்டும் இருக்கிறோம். பிறந்துவளர்ந்த வீட்டில் ஏற்பட்டிருந்தசௌகர்யங்களெல்லாம் அவள் மணமாகிச் செல்லும் கணவன் வீட்டில் கிடைக்குமோ என்னமோ? என எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி அவர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள். மணமகளைக் கணவன் வீட்டிற்கனுப்பும்போது மாமியாருக்கு அடிமை வேலைக்காரியாக அனுப்புவதாகஎண்ணியே அவர்கள்அவ்வாறு துயரமடைகின்றனர். மாமியார் தர்பாரும் அவ்விதமே நடக்கின்றது. இவைகளைப் பார்த்த பெண்ணும் கல்யாணமென்பது துன்ப வாழ்க்கை தான்போலும் என எண்ணி அழுதுகொண்டே இருக்கிறாள்

நமது நாட்டில் மாமியர்களின் ஆதிக்கம் குறைந்து அன்பு நிலவவோ, மருமகளுடைய கவலை நீங்கி இன்பம் பெறவோ பெண்கல்வியுடன் சொத்துரிமையும் அவசியம்

வேண்டற்பாலதாயிருக்கின்றது. இப்பொழுது இருக்கின்ற நிலைமையில் மனைவி கணவன் வீட்டுக்குக் குடிபுகப்போவது மாறி கணவன் மனைவி வீட்டுக்கு குடிபுகுவதால் இன்ப வாழ்வுகிடைக்காதாவென்றும்நாம் சிந்திக்கிறோம். எவர்எங்கு குடிபுகுந்தாலும் பெண்களுக்குச் சொத்துரிமையளிக்கப்பட வேண்டுமென்ற முடிவுக்கே நமது சிந்தனை வந்திருக்கின்றது.

பெண்ணுரிமை பேணாத ஒரு சமூகமோ, தேசமோ உருப்படப்போவதில்லை. நம் நாட்டில் குறிப்பாக இந்துமதப்பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படாததும், அதன் காரணமாக அவர்கள் சமஉரிமையில்லாது அடிமையைப்போல் வாழ்க்கை நடத்துவதும் அதிக அநியாயமாகும். சகோதரர்களெல்லாம் தங்கள் தந்தையின் ஆஸ்தியைப் பகிர்ந்து அநுபவிக்க அவர்கள் சகோதரியோ அப்பூஸ்திதியில் பாகம் கிடைக்காதவளாகி கணவன் வீடுசென்று கவல்கிறாள். அவளுக்கு ஸ்திரீதனம் என்பதாக ஆரம்ப நாளையில் சில தட்டுமுட்டுச் சாமான்கள் மட்டும் அனுப்பப்படுகின்றன. இத்துடன் பிள்ளைவீட்டார் பெண்வீட்டாரிடம் பரிசம் பெறுகின்றனர்.

பெண் கொண்டுவரும் ஆஸ்தி பூஸ்திகளும், ஆபரணங்களும் கணவனது ஆதிக்கத்தையே அடைகின்றன. கணவனுக்காகவே இவை காணிக்கையாக சமர்ப்பிக்கப்படுகிறதாகக் கருதப்படுகிறது. "வரதக்ஷணை" என்னும் இக்கொடிய வழக்கம் ஆரியர்களைப் பின்பற்றி ஏனைய பல சமூகத்திடையும் இப்போது பரவி அதிகக் கஷ்டப்படுத்துகின்றது. பிள்ளைவீட்டார் பெண்ணின் தகுதியைத்தெரிந்துகொள்ளாமல் அப்பெண்வீட்டார் கொடுக்கும் பணத்தைத் தெரிந்துகொண்டபின்னரே பெண்ணை மணம் செய்துகொள்ள ஒப்புகின்றனர். கல்யாண காலத்தில் பிள்ளையைப் பற்றியும், பெண்ணைப்பற்றியும், பேசப்படாமல் நகை, தொகையைப்பற்றியே பேசப்படுகின்றது. இப்பழக்கம் கிராக்கியாகி பிள்ளைவீட்டாருக்குக் கொடுக்கவேண்டிய தொகை ஆயிரக்கணக்காகஉயர்ந்துவிட்டது. தாயிடமிருந்து சொத்துப் பெறுவதானால் இந்து லாவின்படி தாய்க்கோ சொத்தில்லை. தந்தைக்கும், கணவனுக்கும் சொத்திருந்த

போதிலும் பெண்ணானவள் அதில் பாகம் பெறுவதற்குப் பாழும் சட்டத்தில் இடமில்லை. பெண்பிறவி "ஐயோ!" பாப ஜன்மமாகக் கருதப்படுவதால் தந்தைமாரும், சுயநல வழக்கத்தால் சகோதரர்களுக்கும் தங்கள் சொத்தில் சம பாகம் கொடுப்பதில்லை. ஏதோ கொஞ்சம் கொடுத்தாலும் பெண்ணின் கணவன் அதனைத் தன்பேரால் வாங்கிக்கொள்கிறார். அதுவுமல்லாமல் மாப்பிள்ளை வீட்டார் பணம்-பணம் என்று கிராக்கி கொள்ளுகிறார்கள். சொத்தில் நவதானியம் விளையுமேயன்றி பணம் விளைவதில்லை. அந்த நவதானியமும் மலிந்து போனதால் நல்ல விலைக்கு விற்க வழியில்லை. இந்த நிலைமையில் பல பெண்கள் கல்யாணம் செய்துகொள்ள முடியாமலும், செய்தாலும் கஷ்டப்படும் நிலைமையிலுமிருக்கிறார்கள். இதன் மூலம் பெண்வீட்டார் படும் கஷ்டநஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அதனைப் பெண்களைப்பெற்ற பெற்றோர்களே அறிவர்.

இவ்விதம் கஷ்டமும், கவலையும் கொண்டு நடக்கும் கல்யாணத்தில் துன்பமே அன்றி இன்பம் இல்லை. பெண்ணுக்கு மாப்பிள்ளை யாரெனத் தெரியாமலும், மாப்பிள்ளைக்குப்பெண் யாரெனத்தெரியாமலும் கல்யாணங்கள் நிகழ்வதால் ஓணானும் தவளையுமாக ஆளுக்கொரு பக்கம் இழுக்கிறார்கள். இத்தகைய வாழ்க்கையைவிட ஏகாந்த வாழ்வு எவ்வளவோ இன்பகரமானதாகும். இல்லற வாழ்க்கை அவசியமாம்போது காதல் மணமும், பெண்ணின் பேரால்-பெண்ணின் ஆதிக்கத்தில் பெண்களுக்குச் சொத்துரிமையும் ஏற்பட்டாகவேண்டும். இதுகாலபரியந்தம் இந்துக்களில் சொத்துரிமையை ஆண்களே அனுபவித்துவந்திருக்க இனிமேல் பெண்களே சொத்துக்குரியவர்களாக இருந்தால்தான் என்ன? இது ஆண்களுக்கு அநீதியாகுமெனின், இப்போது பெண்களுக்கிருந்துவரும் அநீதியைப் போக்குவான் வேண்டி இந்து லாவைத் திருத்தி பெற்றோர் அல்லது கணவர் பூஸ்தியில் பெண்களுக்குச் சமபாகமாவது கிடைக்கும்படி செய்ய வேண்டும். இதனைக் கவர்ன்மெண்டார் தங்கள் கடமையாகக் கொண்டு நடத்த சட்ட நிபுணர்கள் முயற்சி எடுப்பார்களா?

## அகத்தியர்

# குணவாகடம் 3000.

(சாமி, விருதை, சிவஞானயோகிகள்)

(372-ம் பக்கத் தொடர்ச்சி)

### காசம்.

பாரேநீ காச ரோகத்தின் நேர்மை
பக்குவமாய்ச் சொல்லுகிறேன் பண்பாய்க்கேளு
வாரேநீ சுவாசத்தின் குழல் கடன்னில்
உற்பவித்த வியாதிக்குக் காச மென்பார்
கூரேநீ புப்புசத்தின் வியாதிக் குள்ளே
குறிப்பாக வெப்போதுங் காணு மப்பா
தீரேநீ இதுக்குள் ரண்டுவிதமு முண்டு
தெளிவான தீவிரம் சாத்மீகமாமே. (86)

ஆமேதான் தீவிர காசரோகம்
அப்பனே சொல்லுகிறேன் அறிந்துபாரு
போமேதான் சுரமுடனே மார்பில் குத்தல்
பொங்கமுடன் றுரையதிலே கருகுர்ச் சத்தம்
நாமேதான் மேல்சுவாசம் இருமல்கண்டு
நலமான கபமதுதான் நால்போல்தோன்றும்
தூமேதான் துர்ப்பலமும் அதிகமாகி
சுகமாக நாடியது விரைவாய்ப் போமே. (87)

விரைவான நாக்குத்தான் அழுக்கடைந்து
விருப்பமில்லாத் தலைவலி யாயாசங்கண்டு
மறைவில்லாக் குமட்டலுடன் கபமுமாகி
மகத்தான உறக்கமுடன் விக்கல்காணும்
சிறப்பமுடன் சுவாசகுழல்பொருமி யெய்த்தால்
திறமான வருத்தமது அதிகந்தானே
முறுக்கமுள்ள சிறியகுடல் தனக்கேகண்டால்
முக்கியமாய் ஐயமது முண்டாம் பாரே. (88)

உண்டாகும் குழந்தைக்கும் கிழவருக்கும்
உறுதியுள்ள சிறுகுழலில் வியாதிகாணும்
பண்டான வாலிபருக்குக் காணுதய்யா
பருத்ததொரு உப்புசத்தின் இரண்டுபக்கம்
அண்டாத உப்புசத்தின் மேற்பக்கமேனும்
அப்பனே உப்புசத்தின் மேற்பக்கமேனும்
திண்டாக அதினுடைய குணத்தைக்கேளாய்
திறமாகச்சுவாச கஷ்டம் மூச்சடைப்பாமே (89)

ஆமே—தான் திரேகமது நீலவர்ணங் காட்டும்
அப்பனே ஓயாத இருமல் தோன்றும்
பூமேதான் புரட்டலொடு ரோகி தன்னை
துவளாகப் படுக்கவே இடங் கொடாது
நாமேதான் சதாகாலம் உட்கார்ந்து கொள்வான்
நலமான மூத்திரம் சிவந்து காணும்
காமேதான் நாடியது பெலனுங் கெட்டு
கண்டிப்பாய்த் தீவிரமாய் நடக்குந் தானே (90)

தானான பாதம்-கால் தனிலே யப்பா
தக்கதொரு வீக்கந்தான் காணுமப்பா
மானான அசாத்தியங்கள் உண்டாம் வேளை
மயக்கமொடு பிதற்றலுட னுறக்க முண்டாம்
தேனான பிராணந்தான் போகு மென்று
செப்பிடுவாய் ரோகிதனைக் கண்டபோது
ஊனான வியாதியடா ஆரம்பத்தில்
உள்ளபடி யிரண்டுவிதச் சத்தமாமே (91)

சத்தமது குழல்தன்னில் ஓடும் போது
சதிரான அந்நீருடனே காத்து மோதும்
மத்ததொரு குமிழ்களுண் டாகிப் பின்னே
மகிழ்வுடனே வுடைகிறதும் இப்படியே யாகி

சத்தமுடன் போவதினால் சத்தமுண் டாகி
சதிரான பெருங்குழலில் பெருத்துக் காட்டும்
சித்தமுள்ள சிறுகுழலில் சிறுத்துக்காட்டும்
சீரான குழாய்க்குள்ளே இன்னுங்கேளே. (92)

கேளேநீ சளியடைத்துக் கொண்ட தானால்
கெடியான துவாரமது மூடிக் கொண்டு
வாளேபோல் காத்தடைய யிடமில் லாமல்
வளமில்லா மந்த சத்தம் உண்டாமய்யா
பாளான இதுதீர மருந்து கேளாய்
பக்குவமாய் உப்பினங்கள் இரசசெந் தூரம்
நாளேநீ கபமதனை வெளிப் படுத்த
நலமான பூரணச்சந் திரோதய முதலிலீயே. (93)

வளமான சாத்மீக காச ரோகம்
வன்மையதைச் சொல்லுகிறேன் வளமாய்க்கேளாய்
தளமான இந்தநோய் வாலி பர்க்கு
தான்காணு மென்றுநீ அறிந்து கொள்ளு
சளமான குளிர்ச்சியாலும் யீரத் தாலும்
தான்காணு அப்பாநீ சத்தம் கேளாய்
சுளியான அதின்-குணத்தைச் சொல்லக் கேளாய்
அப்பனே மூச்சுமுட்டல் சலமதிகங் காணும்பாரே. (94)

பாரேநீ இதுதீர மருந்து கேளாய்
பக்குவமாய் மிளகுலேகியங் கற்கண்டு சேர்த்துச்
(செய்வாய்
கூரேநீ ஆடாதோ டைக்கிருதம் செய்து
கொத்தவனே அந்திசந்தி கொண்டாயானால்
தீராத ரோகமெல்லா மிதற்குத் தீரும்
தினந்தினமுஞ் சாப்பிடுவாய் இருமல் காணும்போது
ஆறாத இரணமெல்லாம் ஆறிப் போகும்
அப்பனே யிதையறிந்து அவிழ்தஞ் செய்யே. (95)

## குரல்வளை.

செய்கின்ற குரல்வளையின் மந்தரோகம்
குறிப்பறிய சொல்லுகிறேன் மைந்தா கேளு
உய்கின்ற கண்டத்தின் சிலேட்டும சவ்வு
உறுதியாய்த் தடித்துமே போவ தாலே
அய்யமில் லாத்துவாரங்கள் மூடிக் கொண்டு
அப்பனே சுவாசந்தான் தடையே பட்டு
பைபோலே தண்டுண்டு போவ தாலே
பண்பாக இந்தநோய் காணுந் தானே. (96)

அணுகிலந்த வேளைதனில் குணத்தைக் கேளாய்
அப்பனே சுரமுடனே யிருமல் கண்டு
கணிதமுடன் மூச்சிமுட்டல் வேதனையுங் கண்டு
கனமான கவலையுடன் குரல்கம் மல்தான்
குணிதமுடன் விழுங்குவது கஷ்டமாகி
கூப்பிடவே சத்தமின்றித் தொனியில் லாமல்
பணிகள் செய்யப் பெலங்கெட்டு முகமும்ஊதி
பண்பான கண்களுந்தான் பிதுங்கிப் போமே. (97)

போமேதான் உதடுகளும் வீக்கங் கண்டு
மெலிவான நாடியது விரைவாய்ச் செல்லும்
ஆமேதான் அவ்வேளை குரல்வளையுஞ்சுவாசக்குழலுமய்யா
அதிவேக மாகவே மேல்கீழ் செல்லும்
தாமேதான் விலாவெலும்பு யெடுத் தெடுத்துத்
தானடித்துக் கொள்ளுமா மிந்த நோய்க்கு
மாமேவும் ரோகியப்போ காற்றை வேண்டிப்
பக்குவமா யனுசரிப்பான் பண்பாய்த் தானே. (98)

(தொடரும்)

# மருந்து செய் பகுதி.

## கிரிச்சர கஷாயம்.

ஆரியமா வாகடத்தி னுட்பொருளை யாராய்ந்து
சீரியதா ய்ச்செந்த மிழாய்ச் செப்புகிறேன்
சூரியதா ங்குள்ளநிதா னஞ்சிரிச் சையோத
காரிவி நாகனே கணபதிமே கருத்தில்வா
வாவெனவே சாற்றியதால் வந்த கிரந்திகளும்
போவெனவே நாவிவிடப் போய்விடும் பாவனையாய்
வாக்கான பீனிசமும் மற்றும்பல சன்னிதீர
ஆக்கிரா னம்செய்வீ ரரத்தை யதனாலே
அரத்தைசத குப்பை சுக்கு ஆனநொச்சிச்சாற்றில்
அரைத்திள கக்காய்ச்சி அருந்த வருத்தும்
தலைவலியும் பீனிசமும் தன்னுடனே நீரேத்தங்
குலைகுலைந்து போகுமெனக் கூசாமல் கூறுவாயே.

---

## செவிநோய் நிவாரணத் தைலம்.

கண்டதொரு சேதியொன்று சொல்லக் கேள்
காதிலுள்ள வியாதி யெல்லாம் க்ட்டாய்த்தீர
விண்டபடி முசிறுமுட்டை பூநாகந்தான்
வெற்றியுள்ள நண்டு இறைச்சி வெள்ளையுள்ளி
கொண்டபடி கோழிமுட்டை வசம்பு சுக்கல்
குணமாக வகைவகைக்கு கழஞ்சு கூட்டி
பண்டருளும் வேப்பெண்ணெய் தன்னில் வெந்து
பதம்புக வடித்ததனைக் காதில் பாய்ச்சே
பாய்ச்சியே அடைத்திடுவாய் பத்து நாளும்
பளிச்சென்று செவிகேட்கும் சீழ்பாய்ச்சல் தீரும்

N. B:— ஏட்டுப்பிரதியிலிருந்ததை உள்ளவாறே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

## நேத்திரநோய் நிவாரணி.

பொன்னாங்காணி வேர், கற்றாழை வேர், கையாந்தகரை வேர், கடுக்காய், துருசு இவைகளை சம எடை எடுத்து, கல்வத்திலிட்டு, புளியிலைச்சாறு விட்டு அரைத்து, மாத்திரைகளாக்கி வைத்துக்கொள்ளவும். முலைப்பாலிலுரைத்து கண் வியாதிகளுக்குப்போட நேத்திரரோய் தொண்ணூற்றாறும் குணமாகும்.

---

## வெள்ளை வியாதிக்கு.

சந்தனக்கட்டை ரூபாயெடை 6 எடுத்து, அதைச்சிறு துண்டுகளாக நறுக்கி, 5 படி தண்ணீர் விட்டு, கால் படியாகச்சுண்டவைத்து, வீசம்படி கஷாயத்தில் கொட்டைப்பாக்களவு பசு வெண்ணெயில் சேர்த்து சாப்பிடவும்.

பத்தியம்:— புளி, புகையிலை நீக்கவும்.

---

## சூதக வயிற்வலிக்கு.

சிற்றாமணக்கெண்ணெய் படி $\frac{1}{2}$, வெள்ளைப்பூண்டு ரூபாயெடை 15, முடக்கற்றான் கொழுந்து ரூபாயெடை 15, இவைகளை நன்றாய் அரைத்து ஷெ எண்ணெயில் போட்டு 2-நாட்கள் சிறு தீயாக எரித்து, 3-ம் நாள் மெழுகு பதத்தில் வடித்து மாதவிடாயான அன்று 3-அவுன்ஸ், 2-ம் நாள் 2 அவுன்ஸ், 3-ம் நாள் 1-அவுன்ஸூம் கொடுக்கவும்.

பத்தியம்:— புளி, புகையிலை நீக்கவும்.

---

## ரணம், கட்டி, வீக்கம் இவைகளுக்குமருந்து.

1. எட்டிக்கொட்டையும், அபினியும் வெந்நீர்விட்டு உரைத்து கட்டி, வீக்கங்கள் உள்ள இடங்களில் மேற்பூச்சாகப் பூசவும்.
2. காயம், வெள்ளுள்ளி இரண்டையும் அவரையிலைச்சாறு விட்டு அரைத்து மேற்பூசவும்.
3. வெள்ளைக் குங்கிலியத்தைப் பொடிசெய்து கொஞ்சம் வெண்ணெய்சேர்த்து சிலந்தி, வீக்கம், பிளவை முதலியவைகளுக்கு மேல்பூச குணமாகும்.

# மூலிகைப் பகுதி.

## சீந்தில்.

இதன் கொடியை அமிர்தக்கொடி, அமிர்தவள்ளி என்றும், இதன் கிழங்கை சீந்திற்கிழங்கென்றும் சொல்வது உண்டு. இது உஷ்ண தேசங்களில் அதிகமாய் வளரும். இதற்குக் கசப்புக்குணம் உண்டு.

உபயோகம்:— இதைச்சுரங்கள், துர்ப்பலம், மேக வியாதிகள், புராதன கீல்வாதம், பேதி, இரத்த பித்தம், மாந்த ஜுரம், சர்ப்ப விஷம் முதலியவைகளுக்குக் கொடுக்கலாம். ஜடாராக்கினி உண்டாகும்.

"சீந்திற் கிழங்கருந்த தீபனமா மேகவதை
போந்த வுதிரபித்தம் பொங்குசுர—மாந்த
மதிசாரம் வெய்யகண மாம்பல நோயோடே
கதிவிஷமுங் கெட்டுவிடுங் காண்".

(பதார்த்தகுணசிந்தாமணி)

சீந்தில் கொடியை நிழலில் உலர்த்தி இடித்து, வஸ்திர காயம் செய்து இதன் தூளில் ஒரு விராகனெடை கொடுக்க சுரம், துர்ப்பலம், மேக வியாதிகள் குணமாகும்.

சீந்தில்கொடி விராகனெடை 8, கொத்தமல்லி விதை, அதிமதுரம் வகைக்கு விராகனெடை 1, எலுமிச்சம்பழத் தோல், சோம்புவகைக்குவிராகனெடை ½, கொதிக்கக்காய்ந்த வெந்நீர் அரைக்கால் படி இவைகளைச் சேர்த்து மூடி ஒரு மணி நேரம் ஊறவைத்து வடிகட்டிக்கொள்ளவும்.

வேளைக்கு வீசம்படியாக காலை மாலை நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை வீதம் கொடுத்துவர, விட்டு விட்டு வரும் முறை ஜுரம், மாந்த ஜுரம், சர்ப்ப விஷம் குணமாகும்.

குறிப்பு:— இம்மூலிகை அமிர்தாமலக தைலம், சீந்தில் உப்பு முதலியவைகளுக்கும் பெரிதும் பயன்படுகிறது.

# நாடகப் பகுதி.

## நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(382-ம் பக்கத்தொடர்ச்சி)

அங்கம் 3] களம் 2]

நாகானந்தன், வீரகேசரி.

காலம்—காலை. இடம்—வைகைக்கரை.

நாகானந்தன்:— நண்பரே! நல் வேளையாய் சுகுண சுந்தரியார் பொருட்டுத் தன் உயிர் துறக்கத்துணிந்த சுந்திர குமாரர் மீண்டும் வாழ்வெய்தினர். அதனால் மன்னவருக்கும் மற்றுமுள்ளாருக்கும் நேரவிருந்த துயர் அகன்றது. அவர் அவள்தன் உயிர்மீட்கும் அவாவினல் அவருக்கு சம்பவிக்க விருந்த கேட்டினை மறந்து, மதயானையின் எதிர்முகம்சென்று பாகர்கள் யானைமீதேறும் வண்ணம் ஏறவாரம்பித்தனர். அதேசமயம் யான் பின்புறமேறி சுகுணசுந்தரியை துதிக்கையினின்றும் மீட்டகாரணத்தால் அது மிக்கச்சினந்து அவரைத்துதிக்கையாற்பற்றி தூரவெறிந்தது. அவ்வீழ்ச்சியால் அங்கம்நொந்து மூர்ச்சையாயினர். மெத்தென அவரை பல்லக்கிற்றூங்கிப்போந்தனர். கிரகம் கொண்டேகியபின்னர் சைத்திய உபசாரங்கள் செய்தனர். அடங்கியிருந்த சுவாசம் மெல்லமெல்ல வந்தது. எல்லார் மனக்கவலையும் சற்று ஒழிந்தது. ஆயின் என்ன? அனல்எழச் சுரம் காய்ந்தது. பிரஞ்ஞை மாறியது, புலம்பல் ஆரம்பித்தது, பின்னும் எல்லாருக்கும் பெரும் பயம் உதித்தது. இவ்வாறு மூவேழு திங்கள் கழியவே மெல்லமெல்ல குணமுற்றனர். யாவர் மனக்கவலையு மகன்றது.

வீரகேசரி:— ஐயன்மீர்! அதிக ஆசை அதிக நஷ்டம் என்பதற்கேற்ப அவர் இளவரசியாருக்கு தம்மீது காதல் எழ வேண்டும், அதுகாரணமாய் அவர் "தென்பாண்டிய தேசத்திற்கு, அவளை மணந்து இளவரசாகவேண்டும்" என்றும் அவாக்கொண்டன்றே இக்கிருத்தியம் செய்தனர். ஆயின்

இளவரசியாருக்கோ காதல் எழுந்தபாடில்லை. முன்னவர் சோணாட்டில் தம் கீர்த்தியை விளக்கக்கருதி சத்துரு பலாபலம் கருதாது சொற்பசேனையுடன் கோட்டைபுக்குச்சிறையாயினர். அதனாலும் உள்ளமதிப்பினையிழந்தனர். ஐயோ! பாவம்! இவ்விருமுயற்சியால் இளவரசியார் முன்னர்கொண்டிருந்த சொற்ப அன்பினையுமன்றோ போக்கிக்கொண்டுவிட்டனர். என்செயலாம் அவர் தன் சுயஅபராதத்திற்கு?

**நாகானந்தன்:—** நண்பரே! மதயானையின் ஹஸ்தத்தினின்றும் மீட்டது எல்லாரும் ஒருபெருங்காரியமாய்ப் புகழ்ந்து சந்தோஷிக்கின்றனர். என் விஷயத்திலோ அச்செயல் பெருந்துன்பமாயது. ஏனெனில் இளவரசியை யானையின் துதிக்கையினின்றும் மீட்டு, கையினாற்றூங்கி என் மடிமிசை வைத்தேன். அவள்தன் மூடிய கண்கள் சிறுகச்சிறுக திறந்தன. முகந்தனில் புன் முறுவல் தோற்றியது. அவள்தன் நோக்கும் என் நோக்கும் எதிரெதிராயது. இப்பொது நோக்கு என்னுள் ஆக்கிய வேறுபாட்டினை என்னென்று உரைப்பது? அவள்தன் பொங்கிப் பொலிவுறும் மதிமுகம் மனவெழிலில் நன்கே தீட்டப்பட்டது. அதனைக்கழுவ நன்மதி என்னும் நீர் கொண்டு முயன்றேன். கழுவக்கழுவ அதன் விளக்கம் பெருகியது. பின்னும் என் மனமுற்றும் கொள்ளைகொண்டது. அத்தோற்றத்தை மறக்கக் கொஞ்சமும் ஆற்றலில்லாதுபோனேன். துயிலிலாவதுமறக்கலாமென எண்ண அவள்தன் முழு உருவமும் என் முன் ஆகி துயில்தனை முற்றும் மறக்கச் செய்தது. அதுபற்றி அல்லும் பகலும் அதனதன் உருதனையல்லாது வேறு ஒன்றினை என் பாழ்த்த மனம் கருதுவதேயில்லை. அதுபற்றிப் பாயலை வெறுத்துளேன். பொழுதுபோக்க சோலை சென்றாலோ என்னை இடைவிடாது வாட்டும் அனங்கன் படைவீடாயுள்ளது. அங்கு வீசும் தென்றல் அவன் தேர். நறுமணங்கமழும் மலர்கள் அவன் பகழி. அதுபற்றி அங்கு தங்குதற்கில்லாது இல்லஞ்சேறுகிறேன். சயன அறை சென்றுபாயலில்படுத்துநித்திரைசெய்யமுயன்றாலோ இடையே துயிலெனும் தோழன் அவள்தன் உருதனைக்காட்டுகின்றான். பின்னும் காதல் எழுந்து துன்பந்தனை ஆக்குகின்றது. அப்பால் தூக்கம் வருவதேஇல்லை. அதுசமயம் என் நிலையை

யும் அவள் நிலையையும் கருத்துக்குள்ளாக்கி அவளைக்காதல் கொள்வது தகுதியோவென வினவுகிறேன். முழுத்தெங்கின் கனியை சுவானம் இச்சித்தவாறு ஆமோ என சிந்திக்கிறேன். கிட்டாததால் வெட்டன மறத்தல் வேண்டுமெனச் செப்புகிறேன். தகாதவிடத்துக் காதல் கொள்பவன் கேடு உறுபவன் என வோதுகின்றேன். என் மாற்றமனைத்தும் உவர் நிலத்திட்ட நன் முளை வித்தாகின்றது. குலப்பெருமையில்லா எந்தனுக்கு இப்பாழ்த்த மனத்தால் இரவும் பகலும் சஞ்சலமில்லாது நிம்மதி என்பதில்லையே—என் செய்வேன்!

வீரகேசரி:— ஐயன்மீர்! ஊழின் வலிமை உணர்தற்கு எளிதோ? மூவரும் தேவரும் அதன் வசப்பட்டுச்சுழல்கட லுற்ற செத்தைபோன்று சுழல்வதாயின், மனுஷ்யஜன்மாவால் செய்யற்பாலதேது? நீவிரென்ன விவேகத்திற்குறைந்தவரா? நன்மையும், தீமையும், ஆய்ந்தோய்ந்து அறியும் வலி குன்றியவரா? கிட்டாப்பொருளில் உள்ளம்போக்கி அல்லல் உறுபவரா? இல்லை. தாம் வளர்ந்தது தபோவனம்; கல்வி கற்றது சுந்திரானந்தர்பால். இயற்கையேநற்குணமனைத்தும் உம்மிடம் நாடிவந்துளது. இவ்விதமாய் தாம் பாண்டியன் ஏக புத்திரியும் அவர் பின் தென்னிலம் அனைத்தும் ஆளும் உரிமை வாய்ந்தவருமான சுகுணசுந்தரிபால் தாங்கள் காதலாவானேன்? இது தான் ஊழ் என்பது. தமது பூர்வகன்ம பரிபாகமே தமக்கு மன்னன் பேட்டியளித்தது. அவர்தம் நன்குமதிப்பினையாக்கியது. சேனதிபதி பதவிக்கு உயர்த்தியது. சோழன் யுத்தத்தில் ஜயமது கொடுத்தது. சுகுண சுந்தரியார் பிராணனைக் காக்கும் சமயம் வருவித்தது. இவற்றினையளித்த அச்சத்கருமமே தங்களிருவருக்கும் சந்திப்பினையாக்கும், இருவர் மனத்தினை ஒன்றாக்கும். பின்னர் மண வினையினை முடிப்பிக்கும். அதுகாரணமே தாம் பாண்டியர்பெருமானுவீர். தங்கள் குலம் சாம்பர்பூத்த நெருப்பன்ன மறைவுற்றிருப்பினும் ஏற்ற சமயத்தில் எழுந்து ஜ்வலிக்கும். ஆதலிற் கவலை வேண்டாம்.

நாகானந்தன்:— நண்பரே! நட்பின் சுவபாவமோ நட்பினனது குணக்குறைவுகளை மறைத்து நிறைவே உளதென விளக்குவது. உனக்கு என்பால் நட்பு மிக்க உளதால் என்

னிடம் நற்குணமொன்றே விளங்குகின்றது. நான் விரும் புவதென்பது சற்றும் பொருந்தா. அரசிளங்குமரிபால் என் மனம் பற்றியது தவறே. அத்தவறு தமதுகண்ணிற்படாது, அதுவே தவறிலதெனப்பட்டது அன்னட்பின் காரணத்தால் ஏற்பட்டதாகும். இப்பதினெட்டாம் ஆண்டளவும் சற்றும் வெளிவரா குலப்பெருமை இனியாவெளியாகப்போகின்றது. ஏது அதுவிஷயம் சந்தேகமே—ஆதலின் எனது காதல் ஓர் தலையிலது ஆகும். அது விரகத்தினைப் பெருக்கும். விரகத் தால் விளையும் வேதனைகள் பலவற்றினையும் ஒன்றன்பின் ஒன்றாய் விளைவிக்கும். கடையாய் மரண அவஸ்தையே பலனாய்ப்பலிக்கும். அனாதையான எனக்கு அதுதான் உறும் பேறு. மரண நிகழ்ச்சியால் சுந்திரகுமாரன் சுகுணசுந்தரி தன் காதல்பெறுவன். கடிமணம்முடிப்பன். அவன் மனோ பீஷ்டமெல்லாமடைவன். பின்னர் நீரும் முக்கிய சேனாதி பதி ஆவீர். முத்துமாலைதன் நற்கணவனாவீர். என் நட்பின ராம் நீங்கள் இருவரும் அடையவிருக்கும் பதவியே என் மனவாறுதலாகும்.

வீரகேசரி:— பொறியடக்கவல்ல உத்தமரே! ஏது தமக் கும் இவ்வளவு துயரம். தம்மைப்போலவே சுகுண சுந்தரி யாரும் காதல் நோயால் வருந்துகின்றனர் எனத்தோன்று கின்றது. எனது ஆருயிர் முத்துமாலாவுக்கு அவர் படுவது காமவிரகம் எனப்படவில்லை. பித்த நோயோ அல்லது பேயோ என்பது எண்ணம். அவளுக்கு அன்னத்தில்வெறுப் பாம். உற்றார், உறவினர், பெற்றாரிடத்திலும் வெறுப்பாம். உயிர்த்தோழியரிடத்தில் வெறுப்பாம். அவள் எதையோ எண்ணி ஏங்குகின்றனளாம். தன்னந்தனிமையை விரும்பு கின்றனளாம். இவை கண்டு அன்னையும் பிதாவும் வனதேவ தைகளில் யாதாமொன்று பற்றியதோவென எண்ணி பல பரிகாரங்கள்செய்தனராம். பித்தநோயோவென எண்ணிபல ஔஷதங்கள் தந்தனராம். கிரகங்களின் சாரமோவென ஆதித் யாதி நவக்ரக பூஜை புரிந்தனராம். ஆயின் ஒன்றும் பலித மில்லையாம். இது விஷயங்கள் கருதின் அவளும் தங்கள் போன்று காதல் மீறிக் கலங்குகின்றனள் எனத்தெரிகின் றது. ஆதலின் தங்களின் காதல் ஓர்தலையல்ல. தங்கள் காத லென்னும் பாலில் அவளது காதலென்னும் தேனும் கலந்

துளது. இதனினும் தித்திப்பு வேறு யாதுளது. ஆத லின் நீரே பாக்கியவான்.

நாகானந்தன்:— (தன்னுள்) இனி யான் எவ்விதமும் உத்தியானவனம் சென்று அவள் தன் நிலையை நேரே உணர் வேன். (பிரகாசமாய்) ஐயா! இது விஷயங்கள் தம்மூலமே கேட்டபின்னர் அவளை நேரே காணவேண்டுமென்று எண் ணமாகுது. எல்லாம் வல்ல ஈசன் செயல் எப்படி ஆக்கினும் ஆக்குக. நெடுநேரமாயிற்று. நம்மிருப்பிடம் செல்வோம் வாரும். (இருவரும் மறைதல்.)

(தொடரும்)

---


# ஏகாதசிக் கூத்து.

## பேசும் படக்காட்சி தயாரிப்பவர் களுக்கு ஓர் அதிர்ஷ்டம்!

இது சமூக சீர்திருத்தம், சமபந்திபோஜனம், சம்பந்தமான ஓர் இனிய நாவல். "மேனகா" வுக்குப்பாடல்கள் தயாரித்தவரும், புதுக்கம்பருமான ஸ்ரீமான் பூமிபாலகதாஸ் அவர்கள் இதற்குப் பாட்டுகள் அமைத்து வருகிறார். சீக்கிரம் வெளிவரும். மற்ற விபரங்கட்கு அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

V. S.

C/o "சித்தன்" பழனி.

# பூபதி செந்தூரம்.

இதை உட்கொண்டால் ஜுரம், ஜன்னி, வாந்திபேதி, வயிற்றுப்போக்கு, மகமாரி (பிளேக்) பித்தம், கிறுகிறுப்பு, சூலை, குன்மம், சுவாசகாசம, கபம், வாதம், உடல் வலி, பொருமல், அண்ட வாய்வு, சூதக வாய்வு பக்கவாதம் முதலிய நோய்கள் தீருவதோடு பிள்ளைபெற்ற பெண்களுக்குண்டாகும் எல்லா நோய்களும், குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தங்கள், தோஷங்கள் ஜுரம், ஜன்னி, இருமல் முதலிய சகல நோய்களும் குணமாகும்.

தோலா 1-க்கு விலை ரூ. 4—0—0.

தோலா ¼-க்கு விலை ரூ. 1—0—0.

---

# மேகாமிர்த பஸ்பம்.

வெள்ளை நீர்க்கடுப்பு, வெப்பம், நீர்ச்சிறுப்பு, மேகக் காங்கை, பலவித நீரழிவுகள், மூலக்காங்கை, என்புருக்கி நோய், உறக்கத்தில் விந்து கழிதல், நான்முகம், வாய்ப்புண் முதலிய வெப்பநோய்கள் குணமாகும்.

விராகனிடை 1-க்கு விலை ரூ. 2.

---

# கபகுடோரித் தைலம்.

இதை காலை மாலை இருவேளை சாப்பிட்டுவர காசம், இளைப்பு, (சுவாசகாசம்) குழந்தைகள் இளைப்பு, இருமல், மந்தம், மலக்கட்டு முதலியன நீங்கி நல்ல பசியுண்டாகும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2.

(தபால் சார்ஜ் வேறு)

கிடைக்குமிடம்:—

**சாமி, விருதை சிவஞான யோகிகள்,**

சிவஞான சித்தபார்மஸி கோவில்பட்டி.

# என் கண்ணே!

உன்னைக்காணுந்தோறும் உன் மழலைச்சொற்களைக் கேட்கும்போதும் 'சி. எம். சாமி மருந்துகளின்' ஞாபகம் என்னைவிட்டுப் போகவே போகாது. நீ இருந்த நிலைமையை நினைக்கும்போது ஐயோ! என் வயிறு குபீரென்கிறது. நீ இறந்துவிடுவாய் என பார்த்தவர்கள் எல்லாரும் கூறிவிட்டனர். இந்நிலையில் டாக்டர் **C. P.** சாமியின் சிகிச்சை உன்னை தற்போது கொஞ்சும்படியான நிலைமைக்குக் கொண்டுவந்தது.

இதோ பாலசஞ்சீவிக் குளிகை. கையில் வைத்துக்கொள். இனி நமக்கு பயமில்லை. ஒவ்வொரு பெற்றோரும் இம்மருந்தை வருவித்து வைத்துக்கொண்டால் பாலர் பாதுகாப்பாகும் இது என் அனுபவம்.

## புட்டி 1-க்கு விலை ரூ. 1.

உன் அருமைத்தாய்.

---

### சகல வியாதிகளுக்கும்

உயர்ந்த மருந்துகள் எம்மிடம் கிடைக்கும்.
விபரமான கிராட்லாக் இனாம்.
தேவையுள்ளோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு
எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி S. I.**

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

ஓர் இனிய தமிழ் நாவல்

## இராஜேந்திர சுந்தரி

அல்லது

## தியாகச்செல்வனின் தீரச்செயல்.

ஸ்ரீமான் ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியார்

அவர்களால் எழுதப்பட்டது

இதில் உலக வாழ்க்கை என்பது யாது? கணவன் என்பவர் யார்? நமது கடமை என்ன? என்பன போன்றவைகளையும், காதல் மணமே சிறந்ததெனப் பல மேற்கோள்களுடன் விளக்கப்பட்டிருப்பதையும், கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டில் கடும்புலி வாழும் காடு நன்றே என்பதையும், பல நீதி மொழிகளையும், மற்றும் பல விஷயங்களையும் காணலாம். தமிழ் மக்களாகிய ஆண் பெண் இருபாலரும் படிக்க வேண்டியது அவசியம். சுமார் 350-பக்கங்கள் கொண்ட இந்நாவலின் இரண்டு பாகங்களின் விலை ரூ. 1-8-0 தான்.

---

## உண்மைக் காதல்

அல்லது

## பரிமளா ராகவன்

என்னும் ஓர் இனிய தமிழ் நாவல்.

ஸ்ரீமான் ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியார்

அவர்களால் எழுதப்பட்டது.

உண்மைக்காதலுக்கு அழிவில்லை என்றும் பதிவிரதா தர்மமும் சன்மார்க்கமும் சிறந்ததென்றும், பல இடையூறுகளேற்படினும் உண்மைக்காதல் வெளிப்பட்டு நிலவுமென்றும், காதலுக்கேற்படுந்தடைகளைத் தகர்ப்பதற்கேற்ற கருவியாகவே அக்காதல் துணைபோகிறதென்றும், பாமரரும் படித்தறியக்கூடிய எளிய தமிழ் நடையில் வெளிவந்துளது.

இதன் விலை அணா 0—8—0.

தேவைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், சித்தன், பழனி.

# குஷ்டமா? குழிப்புண்ணா?

## வேறு என்ன வியாதி?

சி. எம். சாமி

# குருதாம்பிர பஸ்பம்

## சாப்பிடுங்கள்.

சர்மவியாதிகளைச் சங்காரம் செய்யும்,

கர்மவியாதிகளைக் களைந்து எறியும்.

ஆஹா! இதுவன்றோ மருந்து!

இத்தனை நாளும் அறியாதிருந்தேன் என்று ஆயிரக்கணக்கானவர்கள் புகழ்கின்றார்கள். நீங்களும் ஒருமுறை உட்கொண்டால் அவர்களைப்போலத்தான் புகழ்வீர்கள். இது உடலிலுள்ள அசுத்த இரத்தத்தை சுத்திகரித்து, ஆறாத மேகப்புண்களை ஆற்றி, தீராத குழிப்புண்களைத் தீர்த்து, திமிர்களைப்போக்கி, பத்துக்களைப் படல்படலாய் உதிர்த்து, தடிப்பு, எரிச்சல், நமைச்சல், இவைகளையும் ஓயாமல் ஒழுகிக்கொண்டிருக்கிற துர்நீர்களையும் தொலைத்து அழுகிக்கிடக்கும் பாகங்களை முன்போலாக்கி, ஆபாசமான உடலை அழகுபெறச்செய்யும்.

இவ்வவிழ்தம் கிரந்தி, வெள்ளை, வெட்டை, அரையாப்பு, முட்டுகளிலுண்டாகும் வீக்கம், சூலை, க்ஷயம், குன்மம், யானைக்கால், பிளவை, குஷ்டம், குறைநோய், மதமதப்பு, மகோதரம், பெருவயறு, பாண்டு, ஜன்னி, மூத்திரரோகம், விரைவீக்கம், அண்டவாதம், பீஜத்திலுண்டாகும் கட்டிகள், நீரொழுக்கு, காக்கை வலிப்பு முதலிய சகலவியாதிகளையும் நிர்மூலப்படுத்தும். மகா அருமையான முறை.

ஏராளமான நற்சான்றுகள் பெறப்பட்டது.

**50-வேளைபஸ்பம் அனுபானத்துடன் ரூ. 25.**

ஏழைகளுக்குமட்டும் இம்மருந்து பாதிவிலைக்குக் கொடுக்கப்படும்.

---

## மலையப்பசாமி வைத்தியசாலை,

## பழனி. S. I.

சுவாசகாசமா? க்ஷயமா?

எப்படிப்பட்ட மார்பு நோயானாலும்

சி. எம். சாமி

# தாளகபஸ்பம்

அதிவிரைவில் குணப்படுத்தும்.

இருமல் வியாதியால் கஷ்டப்படும் எத்தனையோபேர் இதை வாங்கி உட்கொண்டு சுகமடைந்திருக்கின்றனர். சுவாசகாசத்திற்கு இதைவிடச் சிறந்த மருந்து எங்கும் கிடைப்பதரிது. இது இருமல், இளைப்பு, இழுப்பு, ஈளை, கபம், காசம், மார் துடிப்பு, குரலடைப்பு, தொண்டைவலி, க்ஷயம் முதலிய சுவாசப்பை சம்பந்தமான சகல வியாதிகளையும் நீக்கும். மார்பிலும், தொண்டையிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றும். இருமலை நாளாவட்டத்தில் தணியச் செய்து கபத்தை அறவே ஒழிக்கும். ஒவ்வோர் சமயங்களில் சளியோடு ரத்தம் வருதல், கோழை கட்டிகட்டியாய் விழுதல், மஞ்சள் நிறமாக விழுதல், நடந்தால் இளைப்புக் காணுதல் முதலியவைகளையும் குணப்படுத்தும்.

போலிவிளம்பரங்கள் மலிந்து கிடக்கும் இக்காலத்தில் உண்மை மருந்துகளை விசாரித்தறிந்து வாங்குங்கள்.

24-வேளை பஸ்பம் விலை ரூ. 4—0—0.

நற்சாட்சி

சுமார் 10-மாதமாய் எனக்கேற்பட்ட இருமல், இளைப்பு, திணறிக்கை, வாந்தி இன்னும் பலவித கஷ்டங்களுடன் என் சரீரமே இந்த வியாதியால் இனி பூலோக வாழ்க்கையை மறந்து எமலோகப் பிரயாணம் தீர்மானித்திருக்கும் சமயம் தங்களிடம் நேரில் வந்து 24-வேளை தாளகபஸ்பம் சாப்பிட்டதில் ஷை கஷ்டங்கள் எல்லாம் நீங்கி பூராவும் குணமாயிற்று. இருமல் கொஞ்சங்கூட இல்லை.

(Sd.) P. S. வேங்கிடகிருஷ்ண அய்யங்கார்,
12—6—34. சீமையெண்ணெய் டிப்போ, ஈரோடு.

---

மலையப்பசாமி வைத்தியசாலை,

பழனி S. I.

குழந்தையின் தேகசுகம் பெற்றோர்களின்
உடல் நிலையைப் பொறுத்திருக்கிறது.
ஆகையால்

# வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு

உள்ளவர்கள்

### சி. எம். சாமி

# பிரமேக நிவாரணி

உபயோகியுங்கள்.

இது மகாக்கொடிய வியாதி. இதை ஆரம்பத்திலேயே கவனித்து வைத்தியம் செய்துகொண்டால் எளிதில் சுகமாகும். அப்படியின்றி விட்டுவிடுவதால் மேகம் உள்ளூரப் பரவி எல்லையற்ற தீமைகளை விளைவிக்கும். நாள் செல்லச் செல்ல கைகால் பிடிப்புகளில் மேகநீர்தங்கி வீக்கமும் வலியும் உண்டாகி எழுந்திருக்கவும் வேலைசெய்யவும் முடியாத நிலையில் வந்து முடியும். அப்பொழுது நிவர்த்திப்பது கஷ்டசாத்தியமாகும். பிரபல வைத்தியர்களே இவ்வியாதியை அசைக்கமுடியாதென்றால் சாதாரண வைத்தியர்களைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ.

இவ்வியாதிக்கென்றே நாங்கள் அதிக பிரயாசையோடு "பிரமேக நிவாரணி" என்ற மருந்தைக்கண்டுபிடித்து எண்ணிக்கையற்ற வியாதியஸ்தர்களுக்குக் கொடுத்துக் குணப்படுத்தியிருக்கிறோம். இது நீர்த்தாரை எரிச்சல், நீர் இறங்கும்போது சுறுக்சுறுக்கென்று குத்துதல், நீரோடு விந்து கலந்து விழல், நீர் மஞ்சள் நிறமாயிருத்தல், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, இடுப்புவலி, நீரடைப்பு முதலிய வியாதிகளை அறவே நீக்கி, நீர்த்தாரையிலுள்ள ரணங்களை ஆற்றி பூரண சுகத்தைத் தரக்கூடியது. இதைப்போல் வேறு எந்த மருந்தும் குணந்தராதென்பது நிச்சயம்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2—0—0.

---

## மலையப்பசாமி வைத்தியசாலை,

## பழனி. S. I.

184924

என் ஐயா முகவாட்டம்?

## தாதுபுஷ்டி வேண்டுமா?

அப்படியானால்

# மன்மதக் குளிகை

## உபயோகியுங்கள்.

### உபயோகித்த தினமே உற்சாகமடைவீர்கள்.

இது அனேக தாதுவிருத்தி மருந்துகளைச் சேர்த்து உயர்ந்த முறைப்படி தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது பலவீனம், சொற்பனஸ்கலிதம், நரம்புத்தளர்ச்சி, ஆயாசம், உடல் நடுக்கம் முதலியவைகளைப்போக்கி வீரியவிருத்தி, தாதுவிருத்தி, ரத்தவிருத்தி, போகசக்தி முதலியவைகளை உண்டாக்கி மன உல்லாசத்தையும், வாலிபத்தையும் தந்து, வயோதிகனை வாலிபனுக்கும் தன்மை வாய்ந்தது. உலக வாழ்க்கையில் ஊக்கமிழந்தவர்களுக்கு ஊக்கத்தைக்கொடுத்து, மெலிந்த உடலைப்புஷ்டியாக்கி, நபுஞ்சகம் என்னும் பேடித்தனத்தை அடியோடு தொலைத்து, நரம்புகளுக்கு வலுவைக்கொடுத்து, மாதர்மனதைத்திருப்திபண்ணி பூரண ஆயுளையும், அற்புத பராக்கிரமத்தையும் தருவதில் இணையற்றது.

சரீரத்தில் உஷ்ணம்தாக்கி பிரமேகவெட்டைச்சூட்டால் வீரியம் கெட்டு தூக்கத்தில் பங்கப்படுவோர்களும், மூத்திர எரிச்சல், துரிதஸ்கலிதம், எலும்புருக்கிநோய் உள்ளவர்களும் துர்ச்செய்கையின் பலனால் ஆணவத்தையே இழந்து அவதிப்படும் ஆடவர்களும் எமது மன்மதக் குளிகையை உட்கொள்வார்களானால் அவர்களின் குறைகள் நீக்கப்பட்டு திடசரீரிகளாய் வீரபுருஷர்களாய் ஆவார்களென்பது திண்ணம்.

சோதனைக்கு ஒரு புட்டி ஆர்டர் செய்யுங்கள்.

20-குளிகை விலை ரூபாய் இரண்டேதான்.

---

## மலையப்பசாமி வைத்தியசாலை,

## பழனி. S.I.

# கட்டுரை எழுதுவோர்

## கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. விஷயங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் சுத்தமாக மையினால் எழுதப்படவேண்டும். சித்தனில் மூன்று அல்லது நான்கு பக்கங்களுக்குள் அடங்கக்கூடிய விஷயங்கள் முதன்மையாகக் கவனிக்கப்படும்.

2. பிரதி ஆங்கில மாதம் பத்தாம் தேதி பத்திரிகை வெளிவரும். ஆசிரியரால் அங்கீகரிக்கப்படும் கட்டுரைகள் மட்டும் பிரசுரிக்கப்படும்.

3. சித்தனில் பிரசுரமாகும் எல்லா விஷயங்களின் காபிரைட் பிரசுரம் செய்வோர்க்கே உரிமையாகும்.

4. கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கும், அபிப்பிராயங்களுக்கும் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியாகார்.

5. நப்பி பிரசுரிக்கும் கட்டுரைகள் ஏற்கனவே உரிமையாக்கப்பட்டிருந்தால் அதற்குப் பத்திரிகாசிரியர் உத்தரவாதியன்று.

6. கட்டுரைகளை கூட்டவும், குறைக்கவும், ஏற்றுக்கொள்ள மறுக்கவும் பத்திரிகாசிரியருக்கு அதிகாரமுண்டு

7. அங்கீகரிக்கப்படாத கட்டுரைகளை திருப்பி அனுப்புவதாக உறுதி கூற முடியாது. தபால் தலை அனுப்பினால் மட்டும் திருப்பி அனுப்பப்படும்.


### ஏஜண்டுகள் தேவை.

எமது பத்திரிகைகளை விற்பதற்கு எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதவும்.

விலாசம்:— மானேஜர்,

சித்தன்,

பழனி. S.I.

Regd. No. M. 3210.

எவர்! எவர்!!

**இளமையை விரும்பாதார்?**

தளர்ந்தவயதினரும், மெலிந்த உடலினரும்
இழந்த பலமடையச் செய்வது
மகானருளால் கிடைக்கப்பெற்ற எமது
சிறந்த ஔடதமே!

**Permanent Cure.**



**Cure Guaranteed.**

# தங்கபஸ்பம்.

நோயுற்றவர், நோயற்றவர் இருதரத்தினரும்
உட்கொள்ளலாம்.
தேகசுகம், திடகாத்திரம், தாதுபுஷ்டி
அளிப்பதில் இணையற்றது.
24-நாள் பஸ்பம் விலை ரூ. 10—0—0.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
பிராஞ்சு:- 1-54, அருணாசல நாயக்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

Edited, Printed & Published by Dr. C. P. Sami
at the Nityananda Press, Palni.

## சந்தாநேயர்களே!

இம்மாதப்பத்திரிகையுடன் 'சித்தன்' 11-வது பிரதி வெளியிடப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரே ஒரு பிரதி தான் இவ்வாண்டு பூர்த்திபெற இருக்கிறது. ஆதலால் சந்தா பாக்கியுள்ள நேயர்கள் தபால் ஸ்டாம்பாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பி சித்தனை ஆதரிப்பார்களாக.

பல தடவைகளிலும் சந்தா பாக்கியை அனுப்பும் படி கேட்டுக்கொண்டதற்கு சிலர்மட்டும் கவனஞ்செலுத்தியிருக்கின்றனர். மற்ற நேயர்கள் இம்முறையாவது தவராது சந்தாத் தொகையை அனுப்புவார்களென நம்புகிறோம்.

வருட சந்தா அணா எட்டு.

மானேஜர்.